ஜோதி

ஆசிரியர்   வெ. சாமிநாத சர்மா

சுடர் 4   விஷு ௵ வைகாசி ௴   கதிர் 11

ஜூன்-1941

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	=	1
துலாக்கோல் (புஸ்தக விமரிசனம்)	=	20
கெயடே—ஒரு ஜெர்மன் மகா கவி	=	27
கிரேடே தீவு	=	29
மத்திய தரைக்கடல்	=	33
உஜ்வலினி (சிறுகதை)	=	34

இத்தலியும் இஸ்லாமும்	— ஸர்தார் இக்பால் அலிஷா	40
கீதையருளிய கிருஷ்ணன் யார்?	— "தேசிகன்"	43
ஒரு பெரிய மனிதனுயிரு	— வ. பார்த்தசாரதி.	50
அமெரிக்காவும் சென்ற மகாயுத்தமும்	— சார்லஸ் ஸெய்மர்	53
காதலர்களின் சந்நியாசம் (சிறுகதை)	— ஸ்ரீமதி வித்யா வேங்கடராமன், B. A. L. T.	59
அன்றாட உலகம்	—	65
கிரீஸுக்கு ஒரு கண்ணீர்	— லார்ட் பைரன்	69
இன்றைய இலக்கியத்திற்குத் தேவை எது? ஆழ்ந்த நூலா? அகன்ற நூலா?		72

அன்பர்களுக்கு

நமது பிரதிநிதி ஸ்ரீமான் எஸ். ஏ. சின்னசாமித் தேவர் அவர்கள், அப்பர் பர்மாவில் பக்கோ, டாங்கோ, மாந்தலே முதலிய ஜில்லாக்களில், "ஜோதி"யின் அபிவிருத்தியை நாடி வருகின்றார். அவருக்கு அன்பர்கள், எல்லாவித ஆதரவுகளையுமளித்துதவும்படிக் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்

புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகத்தார் ஜனங்களின் சிந்தனையைத் தூண்டிவிடக்கூடியதாகவும், அறிவு விளக்குக்கு வெளிச்சம் கொடுக்கக்கூடியதாகவும், சுதந்திர பாதைக்கு வழிகாட்டக்கூடியதாகவுமுள்ள நூல்களையே வெளியிட வேண்டுமென்று உறுதி கொண்டிருக்கிறார்களென்பது, இவர்களுடைய அடுத்த வெளியீடுகளின் ஜாபிதாவினால் தெரிகிறது. இவர்களுடைய இந்த உறுதிக்காக இவர்களை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். ஏனென்றால் இந்தக் காலத்தில், உயர்ந்த லட்சியத்தோடு காரியங்களைத் தொடங்குகிற பலர், வெகு சீக்கிரத்தில் அந்த லட்சியத்திலிருந்து வழுக்கி விழுந்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இதற்குக் காரணம் மனோபலமின்மையோ வேறெதுவோ நமக்குத் தெரியாது. ஜனங்களுடைய உணர்ச்சிக்கு மட்டும் ஆகாரம் கொடாமல், அறிவுக்கும் இதயத்திற்கும் ஆகாரம் கொடுக்கிற நூல்கள், சீக்கிரத்தில் விற்பனையாகாமலிருப்பதையும் இதனால் ஆசிரியரோ, பிரசுரகர்த்தர்களோ பொருளாதார வாழ்வில் சீர்பெறாமலிருப்பதையும், இந்தப் புதுமலர்ச்சி நூற்பதிப்புக் கழகத்தார் நன்கு அறிந்து கொண்டிருந்தும், லட்சிய வாதிகளாக முன்வந்திருப்பதைக்குறித்து அவர்களை வாழ்த்துகிறோம். தவிர, இந்தப் பிரஸ்தாப நூல்—"மகாத்மா காந்தி"—நாமறிந்த வரையில் வெகு சீக்கிரத்தில் வெளியாயிருக்கிறது. யந்திர வசதிகளும் வேறு பல சௌகரியங்களும் நிறைந்துள்ள மேனாட்டில், சுமார் 90,000 வார்த்தைகளைக் கொண்ட ஒரு நூலை வெளியிடுவதற்குக் குறைந்தது பதினான்கு வாரம் பிடிக்கிறதென்று, ஒரு பிரபல ஆங்கில பிரசுரகர்த்தர் அநுபவத்தோடு கூறுகிறார். ஆனால் தமிழ்ப் பாஷையில் ஒரு நூலை வெளியிடுவதென்றால், அதற்கு சௌகரியங்களுக்குப் பதில் அசௌகரியங்கள் நிறைய இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமையில் சுமார் 87,750 வார்த்தைகளைக் கொண்ட "மகாத்மா காந்தி" என்ற இந்த நூலை, ஏறக்குறைய ஒன்பது வாரங்களில் வெளியாக்கியிருப்பது கழகத்தாரின் ஆழ்ந்த ஆசைக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. இதற்காகவும் இந்தக் கழகத்தாரை நாம் பாராட்டுகிறோம். இவ்வளவு அவசரமாக வெளியாகியிருந்தும் சுமார் 670 பக்கங்கள் கொண்ட இந்த நூலில் சுமார் இருபத்துமூன்று எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. எவ்விதக் குறையுமில்லாமல், தமிழில் உயர்ந்த முறையில நூல்கள் வெளியாக வேண்டுமென்ற ஆசை நமக்கு இருந்தாலும், காலம், இடம், சந்தர்ப்பம் இவற்றோடு அந்த ஆசையைக் கொஞ்சம் சமரஸப்படுத்திக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இனி நூலுக்குள் பிரவேசிப்போம்.

காந்தியடிகள் ஒரு கர்ம வீரர். கர்ம வீரர்களைத்தான் உலகம் மகான்களென்று போற்றி வந்திருக்கிறது. இதனாலேயே, காந்தியடிகளை நாம் மகாத்மாவென்று அழைக்கிறோம். அவருக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த நூலைத் தொகுத்தவர் ராதாகிருஷ்ணன் பிரபல தத்துவ சாஸ்திர அறிஞர். அறிஞர்களும் அதிகாரத்தில் வீற்றிருப்பவர்களும் மகான்களைச் சுலபமாக அறிந்து பாராட்ட முடியாதென்று சொல்வார்கள். இத

னால்தான், அந்தந்தக்காலத்து மகான்களை, அதிகாரிகள் துன்புறுத்தியிருக்கிறார்கள்; அறிஞர்கள் பரிகசித்திருக்கிறார்கள். யேசுநாதர் இதற்குச் சிறந்த உதாரணம். அவர் தமது சமகாலத்தவரால் தெரிந்துகொள்ளப்படவில்லை. ஆனால் காந்தியடிகள் இந்த விஷயத்தில் தனிப்பட்டவராகப் பிரகாசிக்கிறார். தமது சம காலத்து அறிஞர்களாலும் அதிகாரிகளாலும் கௌரவிக்கப்பட்டு வந்திருக்கிறார். இதற்கு இந்த நூலே சாட்சி. இந்த விசேஷத் தன்மை காந்தியடிகளிடம் இருப்பதனால்தான் வெளியுலகத்தாருக்கு அடிமை இந்தியாவைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலைக் காட்டிலும் காந்தியடிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் அதிகமாக இருக்கிறதுபோலும். இந்த நூலிலும் ரைட் ரெவரெண்ட் அஜரய்யாவும் ஸர் அப்துல் காதரும் இதனை அழகாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

இந்த நூலில் ஸர் ராதாகிருஷ்ணன் உள்பட 63 பேர் காந்தியடிகளைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள். இவர்களத்தனைபேரும் அறிவுக் கடலில் கொஞ்சங்கூடச் சளைக்காமல் நீந்தக் கூடியவர்கள். ஆனால் கர்ம க்ஷேத்திரத்தில் எப்படியோ நமக்குத் தெரியாது. மூன்று பேரை மட்டும் இதற்கு விலக்காகச் சொல்லலாம். ஸ்டீபன் ஹாப் ஹவுஸும், ராஜேந்திர பிரசாத்தும், பட்டாபி சீதாராமய்யாவும், சிறந்த அறிஞர்களாயிருப்பது போலவே, சிறந்த கர்ம வீரர்களாகவும் இருக்கிறார்கள். தங்களுக்கு வகுத்துக் கொடுக்கப்பட்ட லட்சியத்திற்காக அநேக தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். இதுதான் விசேஷம். காந்தியடிகளை எல்லோரும் போற்றுகிறார்களென்று சொன்னால், அதிலேகூட ஓர் ஆபத்து இருக்கிறதென்று நாம் அஞ்சுகிறோம். ஏனென்றால், யாரொருவர் எல்லோராலும் போற்றப்படுகிறாரோ அவர் எல்லோராலும் பின்பற்றப்படுவதில்லை. காந்தியடிகளை ஒரு சிலர் போற்றியும், எல்லோரும் பின்பற்றியும் வந்திருந்தால் இந்தியாவுக்கு எப்பொழுதோ கதிமோட்சம் கிடைத்திருக்கும். அப்படியில்லாமல், அவரை எட்டாத கடவுளாக வைத்துப் பூசித்துக்கொண்டிருக்கிறோம். நாம் இப்படிப் பூசை செய்வதை அந்நியர்கள் பாராட்டுகிறார்கள். ஏனென்றால், நம்முடைய கவனம் அவர்கள்மீது திரும்பாதிருக்கிறதல்லவா? அப்படித் திரும்பாமலிருக்கிறவரையில் அவர்களுக்கநுகூலந்தானே! அந்தப் பாராட்டுதலிலே நம்மை நாம் மறந்துவிடுகிறோம். ஏன்? நம்மைக்கூட நாம் இழந்துவிடுகிறோம்.

கட்டுரைகள் எழுதியிருக்கும் 63 அறிஞர்களில் 11 பேர் இந்தியர்கள்; 52 பேர் இந்தியரல்லாதார். இந்த 52 பேரில் 50 பேர் மேனாட்டார்; 2 பேர் கீழ்நாட்டார். இந்தியரல்லாத இந்த 52 பேரும் சுதந்திரக் காற்றை நுகர்கிறவர்கள், சுதந்திரத்தின் அருமையை நன்கு அறிந்து, அதனைக் காப்பாற்றி வைப்பதிலே சிரத்தையுடையவர்கள். பல வல்லரசுகளின் பேராசைக்கும் இரையாகியிருந்த சீனாகூட, சுதந்திர நாடு என்ற ஹோதாவில்தான் அந்தச் சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டுச் சென்ற நான்கு வருஷ காலமாக ஜப்பானுடன் போர் புரிந்துகொண்டிருக்கிறது. காந்தியடி

களைப் பாராட்டியிருக்கிற இந்த 52 இந்தியரல்லாதாரும் ஏகாதிபத்தியக் கொள்கையை எதிர்க்கிறவர்களாயிருக்கலாம். ஆனால் அவர்கள், தங்களுடைய ஏகாதிபத்தியச் சூழலினின்று விடுதலை பெறவில்லையென்பதை நாம் மறந்துவிட முடியாது. உதாரணமாக பெர்ரீடேல்கீத் என்ற அறிஞரை எடுத்துக்கொள்வோம். இவர் சிறந்த சமஸ்கிருத பண்டிதர். இந்தியாவைப் பற்றியும் உலக அரசியலைப்பற்றியும் நன்கு தெரிந்துகொண்டிருக்கப்பட்டவர். இவருடைய அபிப்பிராயப்படி இந்தியா, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட சுதந்திர நாடாகத்தான் இருக்கலாமே தவிர, தனிச் சுதந்திர நாடாக இருக்கமுடியாது. இது போன்ற கொள்கையுடையவர் பலர், இதனை அப்படியே திருப்பிச்சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள், தங்கள் கொள்கையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அநேக ஆதாரங்களை எடுத்துக் காட்டுகின்றனர். ஆனால் நம்மைப் பொறுத்த மட்டில், நாம் இவற்றைக் கண்டு பிரமித்துப் போய் விடவில்லை. ஏனென்றால், எந்த ஒரு கொள்கையையும் நாம் ஏற்கனவே வகுத்துக்கொண்டு விட்டோமானால், பிறகு அதற்கு ஆதாரங்களை தேடுவது சுலபந்தானே.

63 பேருடைய கட்டுரையிலும் ஒரே விதமான நீரோட்டம் அடிப்படையில் ஓடுவதைக் கண்டு நாம் உண்மையில் ஆச்சரியமடைந்து போகிறோம். அதுதான் சர்வ தேச சகோதரத்துவம். தேசிய மிலாதவர்களுக்குச் சர்வ தேசியத்தைப் பற்றிப் பேசுவதென்பது, இலக்கணத்தில் எழுத்ததிகாரத்தைத் தெரிந்து கொள்ளாதவனுக்குத் தொல்காப்பியத்தைப் போதிப்பது போலிருக்கிறது. சுதந்திர நாட்டிலே இருக்கிறவர்கள், தங்கள் சுதந்திரத்திற்குப் பாதகம் ஏற்படாமலிருக்க வேண்டுமென்பதற்காக, சர்வ தேசியத்தைப் பற்றிப் பேசுவதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அடிமைத்தனத்தினின்று விடுதலை செய்து கொள்ள முடியாதவர்கள் கூட, சர்வ தேசியத்தைப் பற்றிப் பேசுவதுதான் நமக்குப் புரியமாட்டேனென்கிறது. நமது அடிமைத்தனத்திற்கு அஃது ஓர் ஆறுதலாயிருக்கட்டுமென்ற எண்ணமா?

•

கட்டுரை யெழுதியுள்ள அன்பர்களில் 11 பேர் காந்தியடிகளின் அரசியலை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ எதிர்த்து வந்திருக்கிறார்கள். தளபதி ஸ்மட்ஸும் லார்ட் ஹாலிபாக்ஸும் காந்தியடிகளின் சிறைவாசத்திற்குக் காரணமாயிருந்தவர்கள். லார்ட் ஸாங்கேயும், லார்ட் ஸாமியலும், ஜார்ஜ் லான்ஸ்பரியும் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர்களாயிருந்து அவருடைய அரசியல் இயக்கத்தை நசுக்குவதற்கென்று தொடங்கப்பெற்ற அடக்குமுறைக்கு ஆதரவு காட்டியவர்கள். லையனல் கார்ட்டிஸும், ஸர் அப்துல் காதரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாயிருந்து அந்த அடக்குமுறையை ஆதரிக்க வேண்டிய அவசியத்திற்குள்ளானவர்கள். ஆர்தர் மூரும். ஜார்ஜ் அருண்டேலும், ஸர் பிரான்சிஸ் யங் ஹஸ்பண்டும், பத்திரிகைகள் மூலமாக அவருடைய அரசியல் போக்கை எதிர்த்தவர்கள். ஸர். மிர்ஸா இஸ்மெயில் காந்தியடிகளின்

சத்தியாக்கிரக இயக்கம் தமது சமஸ்தானத்திற்குள் பரவிவிடாதபடி பாதுகாத்துக்கொள்வதற்காக, அவரைப் போற்றிக்கொண்டே அவருடைய இயக்கத்தை எதிர்த்தவர். இவர்கள் அனைவரும் காந்தியடிகளைச் சிலாகித்து இந்த நூலில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். தங்களுடைய பழைய செயல்களுக்குக் கழுவாய் தேடிக் கொள்வதற்காக இவர்கள் இந்த நூலில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்களென்று சொன்னால், அஃது இவர்களைக் குத்திக் காட்டுவதாகாதென்று நாம் கருதுகிறோம்.

கட்டுரை எழுதிய 11 இந்தியர்களில் இரண்டு பேர் தவிர, மற்ற 9 பேரும் காந்தியடிகளின் அரசியல் போக்கை ஆதரியாதவர்கள். இந்த நூலிலேயே கண்டித்துமிருக்கிறார்கள். ஆயினும் அவருக்குப் புகழ்மாலையைச் சூட்டுகிறார்கள். இவர்களுடைய அருச்சனையினால் காந்தியடிகளின் மகான் தன்மை அதிகப்பட்டும் விடாது; குறைந்தும்போகாது. காந்தியடிகளைப்போன்றமகான்கள், தங்களுக்கு எட்டினாற் போல் நின்றுகொண்டு ஆரவாரத்துடன் "ஜே" கோஷம்போடுகிற ஆயிரம் பேரைக் காட்டிலும், தங்களை அண்டினாற்போல் மௌனமாகப் பின்தொடர்ந்து வருகிற ஒருவரையே அதிகமாக விரும்புகிறார்கள்.

கட்டுரை எழுதிய 63 பேரில் 51 பேர் கிறிஸ்தவர்கள்; 2 பேர் முஸ்லீம்கள்; ஒருவர் பார்ஸி; 2 பேர் பௌத்தர்கள்; 7 பேர் ஹிந்துக்கள். கிறிஸ்தவ அன்பர்களில் பெரும்பாலோர், காந்தியடிகளை, கிறிஸ்து நாதரின் உபதேச நிழலிலேயே வளர்ந்தவரென்றும், அந்த உபதேசங்களையே அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றவரென்றும் சாதித்து எழுதியிருக்கிறார்கள். இவர்கள், மதப்பற்றுடையவர்களாயிருப்பதைக் குறித்து இவர்களை நாம் பாராட்டுகிறோம். ஆனால் உலக சகோதரத்துவத்தைப் பேசுகிற அதே வாயால் தங்களுடைய மதக் கோட்பாடுகளே சிறந்தவை யென்றும் உலகத்து மகான்களனைவரும் அந்தக் கோட்பாடுகளைச் சுற்றியே வலம் வருகிறார்களென்றும் பேசுவதுதான் நமக்கு முரணாகப்படுகிறது. ஆனால் அவர்கள் இப்படிப் பேசுவதிலே ஆச்சரியமில்லை. ஏனென்றால் இப்பொழுது உலகத்தின் பெரும்பாகத்தில் கிறிஸ்தவர்கள்தான் ஆளுஞ் சாதியினராகஇருக்கிறார்கள். இதனால் அவர்கள் மற்றமதங்களைத் தாழ்வாகப்பேசி அலன்மூலமாகத் தங்கள் மதத்திற்குச் சிலாக்கியம் தேடிக்கொள்வதற்கும், அந்தச் சிலாகிப்பைப் பகிரங்கமாகவும் தைரியமாகவும் சொல்வதற்கும் அவர்களுக்கு அனுகூலமிருக்கிறது. கிறிஸ்துவையும் அவருடைய சிஷ்ய கோஷ்டிகளையும் பின்பற்றியே காந்தியடிகள் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார் என்று இவர்கள் சொல்கிற போது, காந்தியடிகள் ஒரு சநாதன ஹிந்து என்பதையும், ஹிந்து மதத்தில் சந்நியாசம் என்பது ஒரு முக்கியமான அம்சம் என்பதையும், இத்தகைய சந்நியாசிகள் ஹிந்து மதத்தில் ஆயிரக் கணக்காகத் தோன்றி மறைந்திருக்கிறார்களென்பதையும் அந்தச் சந்நியாச தருமத்தையே காந்தியடிகள் பின்பற்றி வருகிறாரென்பதையும் மறந்துவிடுகிறார்கள். உதாரணமாக, இந்தக் கிறிஸ்தவ நண்

பர்களில் சிலர், தாங்கள் எழுதியுள்ள கட்டுரைகளுல், காந்தியடிகள் தமது அஹிம்சைப் பாடத்தை, சத்தியாக்கிரக பாடத்தை, டால்ஸ்டாயிடமிருந்து கற்றுக்கொண்டதாகக் கூறுகிறார்கள். காந்தியடிகள், தமது வாழ்க்கையில் ஒரு மாற்றம் ஏற்பட்டதற்கு டால்ஸ்டாயின் நூல்கள் காரணம் என்று சொல்லி அதற்காக அவருக்கு நன்றி பாராட்டியிருப்பதனாலேயே அஹிம்சையும், சத்தியாக்கிரகமும் டால்ஸ்டாயிடமிருந்தே உற்பத்தியாயினவென்று சொல்லிவிட முடியுமா? ஹிந்து மதத்தின் புனிதக் கிரந்தங்களாகிய வேதம், உபநிஷதம், கீதை முதலிய பலவற்றுள்ளும் அஹிம்சையும், சத்தியமும் அழகாகவும் தெளிவாகவும் வற்புறுத்தப்பட்டிருக்கின்றன. இதனையே தாம் பின்பற்றுவதாகக் காந்தியடிகளும் பல முறை கூறியிருக்கிறார். ஆனால் நமது கிறிஸ்தவ நண்பர்கள், மற்ற மதங்களின் மகான்களைத் தங்கள் மதத்தோடு பிணைத்துக் காட்டி அதன்மூலம் தங்கள் மதத்திற்குப் பெருமை தேடிக் கொள்ளப்பார்த்தார்களானால் அதைப் பற்றி நமக்கு ஆட்சேபனையில்லை.

ஆள்கிற ஜாதியாருக்கு ஆளப்படும் ஜாதியாரிடத்தில் எப்பொழுதுமே ஒரு தாழ்வான எண்ணந்தான் உண்டு. இந்த நூலிலே இதற்கு உதாரணங்களைக் காண்கிறோம். சிலர், காந்தியடிகளைப் போற்றிக்கொண்டே இந்தியர்களைப் பரிகாசமாகப் பேசியிருக்கிறார்கள். காந்தியடிகள் உயிருடனிருக்கும் போதே அவருக்கு ரோஜா மலர்களை அளிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிற லார்ட் சாமியல், இந்தியர்களைப் பற்றி என்ன கூறுகிறார் என்பதைப் பாருங்கள்:—

> இந்திய மகாஜனங்கள், பிறரால் வெற்றி கொள்ளப்பட்டு ஆளப்படுவதும், பிற்போக்கடைந்தவர்களாயிருப்பதும், கல்வியறிவு இல்லாதவர்களாயிருப்பதும் மூட நம்பிக்கைகள் நிரம்பியவர்களாயிருப்பதும், வறுமையிலே அழுந்திக்கிடப்பதும் தங்களுடைய விதிப்பயன் என்று கருதுகிறார்கள். இங்ஙனம் கருதுவதற்கு அவர்களுடைய பூர்விக சரித்திரமும், அவர்களால் எதிர்க்க முடியாத நிகழ்கால சக்திகளும் துணை செய்கின்றன. —பக். 507.

மற்றும், சமஸ்கிருத பாஷா பண்டிதர் என்று கௌரவிக்கப்படுகிற பெரிடேல் கீத் என்பவர் "இந்தியர்களுடைய புராதனக் கிரந்தங்கள், மனிதனுக்கு மனிதன் சமமில்லையென்றும், அது தெய்வ சம்மதமென்றும் போதிக்கின்றன" வென்று (பக். 336) கூறுகிறார். இந்தியாவின் புராதனக் கிரந்தங்களை இவர் எவ்வளவு அழகாக அறிந்துகொண்டிருக்கிறார் பாருங்கள்!

இனி, இந்த நூலில் வெளியாயிருக்கும் கட்டுரைகளைப் பற்றிச் சில வார்த்தைகள். ஸர் ராதாகிருஷ்ணனுடைய கட்டுரை, சொல்லலங்காரமுடைய ஒரு கோபுரம் போலிருக்கிறது. ஸ்டீபன் ஹாப்ஹவுஸின் கட்டுரை (பக்கம் 220-221) நம்மைக் கனவு உலகத்தில் சிறிது நேரமேனும் மறந்திருக்கும்படிச் செய்கிறது. ஸ்ரீமதி ஸோபியா வாடியா, தாம் ஒரு பார்சியாயிருந்தும், ஹிந்து மதக் கிரந்தங்களில் தமக்கு அதிகமான பரிச்சயம் உண்டென்று காட்டிக்கொள்வதற்காகவே இதில் கட்டுரையெழுதியிருக்கிறாரோ வென்னும்படியிருக்கிறது.

டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவின் கட்டுரை, காங்கிரசில் காந்தியடிகளின் செல்வாக்கு ஏற்பட்ட பிறகு நடைபெற்ற சம்பவங்களை வரிசைக்கிரமமாகக் கூறும் 'டைரி' மாதிரி இருக்கிறது. ஜீன் ஹூரய்லண்ட், இ. இ. எம். ஜோட், ஆர்தர் மூர், ரெஜினல்ட் ரெயினால்ட்ஸ், குமாரியாட் ராய்டன், எச். ஜி. வுட் முதலியோருடைய கட்டுரைகளில், கருத்து வேற்றுமைகள் இருந்தாலும், நமது சிந்தனையைத் தூண்டிவிடக் கூடிய பல விஷயங்கள் இருக்கின்றன. மற்றக் கட்டுரைகள் யாவும், படிக்க வேண்டிய கட்டுரைகள் என்று நாம் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு புதிய விஷயம் நமக்குத் தெரிகிறது.

திரு அருட்பிரகாச வள்ளலார்

திருவாளர் ராம. வீரப்பன் அவர்கள் திருமணத்தின் போது, கண்டனூர் சன்மார்க்க சபையாரால் இலவசமாக வெளியிடப் பெற்றது; ஆக்கியோர்: அன்பு; பூல்ஸ்காப் அளவு 1x16; 29 பக்கங்கள்.

சிறந்த தேச பக்தரான ஸ்ரீ அன்பு நாச்சியப்பன் அவர்கள் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் சரித்திரத்தைச் சுருக்கமாக இந்த நூலில் எழுதியிருக்கிறார்.

தேக போஷணையில் கண்ணுங் கருத்துமாயிருந்து கொண்டு அதே சமயத்தில் தன்னைத்தான் தெரிந்து கொள்ள விழையும் ஒருவர், ஒரு முதலையை, மரக் கட்டையென்று நம்பி அதனைப் பிடித்துக் கொண்டு ஆற்றைக் கடக்கப் பார்க்க விரும்பும் ஒருவரைப் போலாவர்.

—விவேக சூடாமணி.

கெயடே—ஒரு ஜெர்மன் மகா கவி

கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டில், ஐரோப்பிய இலக்கிய உலகத்தில் ஜெர்மனிக்கு ஓர் உயர்ந்த ஸ்தானத்தை வாங்கிக் கொடுத்தவன், ஜான் வுல்ப்காங் கெயடே (Johann Wolfgang Goethe) என்ற மகாகவி. இவன் கி. பி. 1749ம் வருஷம், ஜெர்மனியிலுள்ள பிராங்க் போர்ட் என்ற ஊரில் பிறந்தவன். இவன் குடும்பத்தினர், பரம்பரையாகவே ஒரு நல்ல நிலைமையில் வாழ்ந்து வந்தவர்கள். இதனால் கெயடேக்கு பாலியத்திலிருந்தே, தன் அறிவை விருத்தி செய்து கொள்வதற்கான எல்லா வசதிகளும் ஏற்பட்டிருந்தன. இவன், தனது பதினாறாவது வயதுக்குள் கலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்டு, 1765ம் வருஷம் லைப்ஸிக் சர்வ கலாசாலையில், சட்டப் பரீட்சைக்குப் படிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சேர்ந்தான். இங்கு இவன் மூன்று வருஷ காலம் கழித்தான். இந்த மூன்று வருஷ காலமும் இவனுக்கு அமைதி யென்பது இல்லாமலே இருந்தது. ஏனென்றால், இவனுடைய அதி சூட்சும புத்தியானது இந்தக் காலத்தில வெளிப்பட்டது. அதே சமயத்தில், இவனுடைய சிந்தனா சக்தியும் அதிதீவிரமாக இருந்தது. இவனுடைய நடவடிக்கைகளும் சாதாரண ஜனங்கள் அறிந்து கொள்ளக் கூடாதபடி இருந்தன. இவை, இவனுடைய ஆசிரியன்மார்களுக்கு அதிகமான திகைப்பை உண்டு பண்ணின. இந்தக் காலத்தில் இவன், அநேக பிரெஞ்சு நூல்களைப் படித்தான். பிரபல பிரெஞ்சு ஆசிரியர்களுடைய காவியங்களை ரசிக்கத் தொடங்கினான். ரசிப்பதோடு மட்டும் நின்று விட வில்லை; ஜெர்மன் பாஷையில் இரண்டு நாடகங்களை இயற்றினான். லைப்ஸிக் சர்வ கலாசாலையை விட்டு விட்டு, பின்னர் ஸ்ட்ராஸ் புர்க் சர்வ கல சாலையில் இரண்டு வருஷ காலம் படித்தான். இந்தப் படிப்பின் பயனாக என்ன ஏற்பட்டதென்றால், அதுகாறும் ஜெர்மன் பாஷையில், உரை நடைக்கு இடப்பட்டிருந்த பல வரம்புகளும் தகர்க்கப் பட்டன. உரை நடையானது, இயற்கையாகவும், உள்ளதை உள்ளபடி உரைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமென்பதாக, அந்தக் காலத்தில் ஒரு சில எழுத்தாளர்கள் சேர்ந்து ஓர் இயக்கத்தை ஆரம்பித்தனர். இதில் கெயடே தீவிரமாகக் கலந்து கொண்டான். இந்தப் புதிய உத்வேகத்தை வெளிப்படுத்தும் பொருட்டு இவன் இரண்டு நாடகங்களை எழுதினான். இந்த இரண்டு நாடகங்களும் கெயடேக்கு அதிகமான புகழை அளித்தன. பல அறிஞர்கள் கெயடேயின் சிநேகிதத்தை நாடினர். இதற்குப் பிறகு இன்னுஞ் சில நாடகங்களையும் கெயடே எழுதினான். இவனுடைய புகழைக் கேள்வியுற்று, வய்மார் பிரதேசத்தின் தலைவனான கார்ல் பிரபு, தனது ஆஸ்தான வித்துவானாயிருக்கும்படி கெயடேயை அழைத்தான். கெயடேயும் அழைப்புக் கிணங்கினான். இதற்கு முன்னரேயே "பவுஸ்ட்" என்ற மகா காவியத்தை எழுத ஆரம்பித்தான். இதனை, வய்மாருக்குச் சென்ற பிறகு தொடர்ந்து எழுதிக் கொண்டு வந்தான். பின்னர், 1786ம் வருஷம் இத்தலிக்குச் சென்ற

அங்குப்பல செய்யுட்களை இயற்றினான். தவிர, விஞ்ஞான சாஸ்திரத்திலும் சில ஆராய்ச்சிகள் செய்தான். கிரேக்க காவியங்களையும் இவன் இந்தக் காலத்தில் படித்து விட்டு அவைகளைத் தழுவி, "இபிஜெனியா" என்ற ஒரு காவியத்தை இயற்றினான். இப்படி இவன் பல நூல்களையும் இயற்றிக் கொண்டு வந்த போதிலும், இடையிடையே "பவுஸ்ட்" என்ற மகா காவியத்தையும் இயற்றிக் கொண்டு வந்தான். இதனை எழுதி முடிக்கச் சுமார் 50 வருஷங்களாயின. முதன் முதலாக இந்த நூல் 1831ம் வருஷத்தில் வெளியிடப் பட்டது. இதுதான், கெயடேயுக்கு அழியாத புகழைத் தந்தது.

கெயடே, ஒரு கவி மட்டுமல்ல. விஞ்ஞான சாஸ்திரம், தாவரவர்க்க சாஸ்திரம், உடற்கூறு சாஸ்திரம், கணிதம் முதலியவைகளிலும் இவன் அதிக புலமை பெற்றவனாயிருந்தான். இவை சம்பந்தமாக இவன் சில நூல்களையும் எழுதியிருக்கிறான். இவன் தன் சம காலத்தவரால் புகழப்பட்டதைக் காட்டிலும், பிற்காலத்தவரால் அதிகமாகப் புகழப் பட்டான். இவன் இறந்தது 1832ம் வருஷம்.

கெயடே

கிரேடே தீவு

1941-ம் வருஷம் மே மாதம் மூன்றாவது வாரத்திலிருந்து ஜெர்மானிப் படைகளுக்கும், பிரிட்டிஷ் படைகளுக்கும் கிரேடே என்னுந் தீவில் மும்முரமான யுத்தம் நடைபெறுகிறதல்லவா? இந்தத் தீவு எங்கேயிருக்கிறது?

கிரீஸுக்குத் தெற்கே மத்திய தரைக் கடலின் கிழக்குப் பாகத்தில் சிறு சிறு தீவுகள் அநேகம் இருக்கின்றன. இவற்றில் மிகப் பெரியது கிரேடே என்னுந் தீவு. இது கிழக்கு மேற்காக 155 மைல் நீளமும் வடக்கு தெற்காக 7 மைலிலிருந்து 35 மைல் வரை அகலமும் உடையதாக இருக்கிறது. இதன் ஜனத்தொகை சுமார் 386,427. தலைநகரம் கானியா என்பது. கிரேடே மலைத்தொடர்புகள் நிறைந்த ஒரு பிரதேசம். அநேக ஆண்டுகளாக இந்தத் தீவு துருக்கியின் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. ஆனால் இந்தத் தீவு வாசிகள் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாயிருந்தமையால், துருக்கிய அதிகாரிகளுக்கும் கிரேடே வாசிகளுக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் நடைபெற்றுக் கொண்டு வந்தன. 1912ம் வருஷந்தான், கிரேடே தீவு கிரீஸுக்குச் சொந்தமாயிற்று. கிரேடே வாசிகள், கிரீஸ் பார்லிமெண்டில் பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

ஈராக்

ஈராக் என்று இப்பொழுது அழைக்கப்படுகிற பிரதேசந்தான் முன்னர் மெஸபடேமியா என்றழைக்கப்பட்டது. இது சரித்திரப் பிரசித்தி பெற்ற நாடு. வடக்கில் ஆசியத் துருக்கியையும், தெற்கில் அரேபியாவையும், மேற்கில் சிரியாவையும், கிழக்கில் ஈரானையும் எல்லையாக உடையது. இதன் ஏறக்குறைய மையத்தில் பாக்தாத் என்ற தலைநகரமும், தென்கோடியில் பஸ்ரா என்ற பிரதான பட்டினமும் இருக்கின்றன. வடக்கு தெற்காக சுமார் 600 மைல் நீளமும், கிழக்கு மேற்காக சுமார் 480 மைல் அகலமும் உடையது. 1932ம் வருஷத்தில் எடுத்த ஜனக்கணிதப்படி இதன் ஜனத்தொகை 23,57,000. இதில் ஸுன்னி முகம்மதியர்கள் 10,29,800 பேர்; ஷியா முகம்மதியர்கள் 16,12 000 பேர்; யூதர்கள் 73,000 பேர்; கிறிஸ்தவர்கள் 1,11,000 பேர். மற்ற மதத்தினர் 29,000 பேர்.

உலகத்தில் உற்பத்தியாகிற பேரீச்சம் பழத்திலே ஏறக்குறைய முக்கால் பாகம் இந்த ஈராக்கிலேயே உற்பத்தியாகிறது. உலகத்திலேயே மிகப் பெரிய பெட்ரோல் கிணறுகள் பல இந்த ஈராக்கிலுள்ள மோசூல் என்ற பிரதேசத்தில் இருக்கின்றன.

1914ம் வருஷத்திற்கு முன்னர், ஈராக்கானது துருக்கியின் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. பின்னர், மேற்படி யுத்தத்தில் துருக்கியானது, நேசக்கட்சியாருக்கு விரோதமாக யுத்தம் தொடுத்தமையால், பிரிட்டிஷார், பாரசீக வளைகுடாவிலுள்ள தங்கள் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு பஸ்ராவில் ஒரு பிரிட்டிஷ் படையைக் கொண்டுவந்திறக்கினர். இந்தப் படைக்கும் துருக்கிப் படைகளுக்கும் பலத்த சண்டை நடை-

பெற்றது. கடைசியில் பிரிட்டிஷார் வெற்றி பெற்று 11-3-1917ல் பாக்தாத் நகரத்திற்குள் பிரவேசித்தனர். மேற்படி படைக்குத் தலைமை வகித்துச் சென்ற தளபதி மாட் என்பவர், துருக்கியர் ஆதிக்கத்திலிருந்து ஈராக்கியர்களை விடுதலை செய்வதற்காகவே பிரிட்டிஷார் வந்திருப்பதாகவும், ஈராக்கியர் தங்களுடைய பழைய புகழை மீண்டும் ஸ்தாபித்துக்கொள்ள வேண்டுமென்பது அவர்களுடைய விருப்பமென்றும் ஓர் அறிக்கை விடுத்தார். 13-8-1921ல் பெய்ஸல் என்பவர் ஈராக்கியர்களால் அரசராக தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலின்போது அதிகமான ரத்தச் சிந்துதலும் குழப்பமும் ஏற்பட்டன. பின்னர், சர்வ தேச சங்கமானது, ஈராக்கின் அரசாங்க நிருவாக மேற்பார்வையைக் கிரேட் பிரிட்டனிடம் ஒப்புவித்தது. பிரிட்டிஷ் நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் பெய்ஸல் மன்னர், ஒரு மந்திரிச் சபை முதலியன அமைத்தார். ஆயினும் உள்நாட்டுக் கலகங்கள் பல ஏற்பட்டன. கடைசியில், ஈராக்கின் மேற்பார்வைப் பொறுப்பை கிரேட் பிரிட்டன் விட்டுவிட்டது. கிரேட் பிரிட்டனும் ஈராக்கும் சம அந்தஸ்து பெற்ற நாடுகளாக சிநேகஒப்பந்தம் செய்துகொண்டன. ஈராக்கை சர்வதேச சங்கத்தில் சேர்த்துவிடுவதாக கிரேட் பிரிட்டன் உறுதி கூறியது. ஆனால், ஈராக் தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்ளுஞ் சக்தியைப் பெறவேண்டுமென்று ஒரு நிபந்தனை விதித்தது. இறுதியாக 1932ம் வருஷம் ஈராக்கை சர்வதேச சங்கத்தில் சேர்த்துக்கொண்டார்கள். இதற்குப் பிறகு ஈராக்கில் வசித்துக்கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கும் ஈராக்கியர்களுக்கும் கலகங்கள் ஏற்பட்டுக்கொண்டு வந்தன. இதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மேற்படி கிறிஸ்தவர்களை, வேறோர் இடத்தில் குடியேற்றிவைக்க வேண்டியிருந்தது. இந்த நிலைமையில் 9-9-1933ல் பெய்ஸல் மன்னர் இறந்துபோனார். இவருடைய மகனான காஜி என்பவர் பட்டத்துக்கு வந்தார்.

ஈராக்கின் பல இடங்களில் பெட்ரோல் அதிகமாயிருப்பதால், இதனைத் தோண்டி யெடுக்க மூன்று அந்நிய நாட்டுக் கம்பெனிகள் வேலை செய்கின்றன. இதன்மூலம் ஈராக் அரசாங்கத்திற்கு நல்ல வருமானம் கிடைத்துக்கொண்டிருக்கிறது. மோஸுல் பிரதேசத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து குழாய் வழியாக பெட்ரோல் மத்தியதரைக் கடலுக்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கிருந்து கப்பல் மார்க்கமாக முக்கிய ஊர்களுக்கு அனுப்பப்படுகிறது. 1938ம் வருஷத்தில்மட்டும் ஈராக்கில் உற்பத்தியான எண்ணெய் 42,72,000 டன்.

இப்பொழுது பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கிளம்பியிருக்கும் சையத் ரஷீத் அலி, ஈராக் தேசிய இயக்கத்தின் தலைவர்.

சிரியா

சிரியாவின் வடக்கே ஆசியத் துருக்கியும் கிழக்கே ஈராக்கும் தெற்கே பாலஸ்தீனமும், மேற்கே மத்தியதரைக் கடலின் ஒரு பாகமும் இருக்கின்றன. இதன் மொத்த விஸ்தீரணம் சுமார் 60,000 சதுர மைல். ஜனத்

தொகை சுமார் 28,31,622. முக்கிய நகரங்கள் டமாஸ்கஸ், அலெப்போ, ஹோம்ஸ் முதலியனவாகும். 1914ம் வருஷ யுத்தத்திற்கு முன்னர், சிரியாவானது, துருக்கியின் ஆதீனத்திற்குட் பட்டிருந்தது. யுத்தத்தின் போது, நேசக் கட்சிப் படையினர், தளபதி அலென்பியின் தலைமையில் சிரியாவுக்குள் பிரவேசித்து துருக்கியர்களை விரட்டியடித்தார்கள். இதற்குப் பிறகு, சிரியாவின் அரசாங்க நிருவாக மேற்பார்வை பிரான்ஸ் வசம் ஒப்புவிக்கப்பட்டது. சிரியாவின் சில பகுதிகளை, எமிர் பெய்ஸல் என்பவர் (இவர் தான் பின்னர் ஈராக்கின் அரசராக 192 ம் வருஷத்திலிருந்து 1933ம் வருஷம் வரையில் இருந்தார்.) நிருவகித்து வந்தார் இவர், பிரான்சின் மேற்பார்வையின் கீழ்நிருவாகத்தை நடத்தி வர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஆனால், 8-3-1920ல் டமாஸ்கஸ் நகரத்தில் கூடிய 'சிரியன் காங்கிரஸ்', எமிர் பெய்ஸல், சிரியாவின் சுதந்திர மன்னராக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தது. ஆனால் இதனை நேசக் கட்சியார் அங்கீகரிக்கவில்லை. எனவே, பிரெஞ்சுப் படைகள் தளபதி கௌராட் என்பவருடைய தலைமையில் டமாஸ்கஸ், அலெப்போ, ஹோம்ஸ் முதலிய முக்கிய நகரங்களைக் கைப் பற்றிக் கொண்டன. உடனே பெய்ஸல் மன்னர், நாட்டை விட்டு ஓடிப் போய் விட்டார். இதற்குப் பிறகு, ஒரு பிரெஞ்சு ஹை கமிஷனரின் மேற் பார்வையில், அரசாங்க நிருவாகம் நடைபெறுகிறது.

சிரியாவை, நான்கு மாகாணங்களாகப் பிரித்து நிருவாகம் நடத்துகிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு தினுசான நிருவாக முறை இருந்து வருகிறது. இந்த நான்கு மாகாணங்களுக்கும் சேர்ந்தாற்போல் ஒரு பார்லிமெண்ட் உண்டு. இந்தப் பார்லிமெண்டரி நிருவாகத்தில் அடிக்கடி கலகங்கள் முதலியன விளைந்து வந்ததால், 1937ம் வருஷத்திலிருந்து, பிரெஞ்சு ஹை கமிஷனரே, தமது விசேஷ அதிகாரத்தைக் கொண்டு நிருவாகத்தை நடத்தி வருகிறார். இங்ஙனம் பார்லிமெண்டரி நிருவாகம் சரியாக நடைபெறாமைக்குக் காரணம், சிரியர்களிடையே தோன்றியுள்ள தேசிய உணர்ச்சியே காரணமென்று சொல்லப் படுகிறது.

ஈ ரா ன்

இந்த நாட்டையே பெர்ஷியா என்று அழைப்பர். 21-3-1935 லிருந்து ஈரான் என்றே அழைக்கப் பட வேண்டுமென்று ஈரான் அரசாங்கத்தார் உத்திரவு போட்டனர்.

•

ஈரானுக்கு வடக்கிலும் வட மேற்கிலும் ருஷ்யாவும் காஸ்பியன் கடலும் இருக்கின்றன. கிழக்கே பலுசிஸ்தானமும் ஆப்கானிஸ்தானமும் இருக்கின்றன. தெற்கே பாரசீக வளைகுடாவும் அரேபியக் கடலும் இருக்கின்றன. மேற்கே ஈராக்கும், ருஷ்யாவைச் சேர்ந்த குர்திஸ்தானும் இருக்கின்றன. இது, வடக்கு தெற்காக 700 மைலும், கிழக்கு மேற்காக 900 மைலும் விஸ்தீரணங் கொண்டது. ஜனத்தொகை சுமார் 10,000,000. ஈரானின் நிருவாக சௌகரியத்திற்காக முப்பத்துமூன்று

மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள். தலைநகரம் டெஹ்ரான். மற்ற முக்கிய நகரங்கள் டாப்ரிஸ், இஸ்பாஹான், மெஷெத், ரெஷெத், கெர்மான்ஷா, முதலியன.

ஈரானில் உலோகப் பொருள்கள் மிக அதிகம். தங்கம், வெள்ளி, ஈயம் முதலிய பொருள்கள் ஏராளமாகப் புதைந்து கிடக்கின்றன. மண்ணெண்ணெய்க் கிணறுகளும் அதிகம். இதனால் இந்நாட்டிற்கு உதவி செய்வதாகச் சொல்லிக்கொண்டு ஐரோப்பிய வல்லரசுகள் பல முன்வந்தன. சுமார் நூறு வருஷ காலமாக, இந்த அந்நிய வல்லரசுகளின் தலையீடு ஈரானில் அதிகமாக இருந்துகொண்டு வருகிறதென்றுசொல்லலாம். சென்ற 1914ம் வருஷத்தில் ஈரான் நடுநிலைமை வகித்திருந்தபோதிலும், இந்த நடுநிலைமையைக் குலைக்க எல்லா வல்லரசுகளும் முயன்றன.

ஈரானை பரம்பரையாக வந்த ஓர் அரச குடும்பத்தினர் ஆண்டுவந்தனர். இவர்களுக்கு "ஷா" என்று பெயர். இந்த அரசர்களுடைய நிருவாகம் பெரும்பாலும் ஊழலாக இருந்தது. இதனால் 1905ம் வருஷக் கடைசியில், ஈரானில் ஒரு தேசீய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவாக, அப்பொழுது சிங்காதனத்தில் வீற்றிருந்த முஸபருத்தீன் ஷா என்பவர், ஜனப்பிரதிநிதித்துவமுள்ள சில அரசியல் சீர்திருத்தங்களை வழங்கினார். ஆனால் இதனை இவர் நடைமுறையில் கொணரவில்லை. ஜனங்களுக்கு அதிகமான அதிருப்தி ஏற்பட்டது. இதனால், இவர்களுக்குப் பின்வந்த அரசர்கள்மீது ஜனங்களுக்கு ஒருவித அதிருப்தி இருந்து கொண்டே இருந்தது. கடைசி அரசரான ஷா அகமத் மிர்ஸா என்பார், 1925ம் வருஷம் பட்டத்தினின்று விலக்கப்பட்டார். ரிஜாகான்பெஹ்லாவி என்ற ஒரு சேனை வீரர் அரசராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இவருடைய அரச பரம்பரைதான் இப்பொழுது ஆண்டு வருகிறது. 1929ம் வருஷம், ஈரான் சர்வதேச சங்கத்தில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கிரேட் பிரிட்டனுக்கும் ஈரானுக்கும் அடிக்கடி மனஸ்தாபங்கள் ஏற்பட்டும் பின்னர் சமரஸம் உண்டாகியும் வந்திருக்கின்றன. இந்த மனஸ்தாபங்களுக்கெல்லாம் முக்கிய காரணம், ஈரானிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைச் சுரண்டும் விஷயமாகத்தான். ஈரான், எல்லா வல்லரசுகளுடனும் சிநேகப்பான்மை காட்டி வருகிறது. ஜெர்மனி, கிரேட் பிரிட்டன், ருஷ்யா முதலிய எல்லா வல்லரசுகளுடனும் ஈரான் சிநேக ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறது.

சில விவரங்கள்

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்திலிருந்து, ஈரானின் தலைநகரான டெஹ்ரானுக்குச் சுமார் 425 மைலும், டெஹ்ரானிலிருந்து, ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலுக்குச் சுமார் ஆயிரம் மைலும் இருக்கின்றன. ஆப்கானிஸ்தானத்து வடகிழக்கு எல்லையும், ருஷ்யாவின் தெற்கு எல்லையும், இந்தியாவின் வடக்குப் பாகத்தின் மையத்திலுள்ள எல்லையும் ஹிந்துகுஷ் பிரதேசத்தில் சந்திக்கின்றன.

மத்திய தரைக்கடல்

ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா மூன்று கண்டங்களுக்கும் நடுவில் இருப்பது இந்தக் கடல். அத்லாந்திக் மகா சமுத்திரத்திற்கும் இதற்கும் ஜிப்ரால்டர் ஜலசந்தி வழியாகத் தொடர்பு இருக்கிறது. டார்டனெல்ஸ் ஜலசந்தி வழியாகக் கருங்கடலோடு தொடர்பு இருக்கிறது. சூயஸ் கால்வாய் வழியாகச் செங்கடலோடு தொடர்பு இருக்கிறது.

மத்தியதரைக் கடலின் மொத்த விஸ்தீரணம் முப்பது லட்சம் சதுர மைல். டிர்ரேனியன் கடலென்றும், ஐயோனியன் கடலென்றும், அட்ரியாடிக் கடலென்றும், ஏஜியன் கடலென்றும் சொல்லப்படுபவன யாவும் மத்தியதரைக் கடலின் பிரிவுகளேயாம்! இத்தலி, ஸிஸிலி பிரதேசங்களுக்குக் கிழக்கேயுள்ளனவெல்லாம் கிழக்கு மத்தியதரைக் கடலென்றும், மேற்கே யுள்ளனவெல்லாம் மேற்கு மத்தியதரைக் கடலென்றும் அழைக்கப்படுகின்றன. மற்றச் சமுத்திரங்களைக் காட்டிலும், மத்தியதரைக் கடலின் ஜலமானது மிகவும் உப்பாயிருக்கும். கி. பி. பதினெட்டாவது நூற்றாண்டு முதற்கொண்டு மத்தியதரைக் கடலின் ஆதிக்கம் பிரிட்டன் வசம் இருக்கிறது. பிரிட்டனுடைய ஜீவ தாது, இந்த மத்தியதரைக் கடலின் வழியாகவே ஓடுகிறதென்று சொல்லப்படுவதுண்டு. ஏனென்றால், இந்தக் கடலுக்கு நுழை வாயில் போலிருக்கின்ற ஜிப்ரால்டர் பிரிட்டிஷார் வசமிருக்கிறது. மத்தியதரைக் கடலின் ஏறக்குறைய மத்தியிலேயுள்ள மால்டா தீவும் பிரிட்டிஷார் வசமே இருக்கிறது. இந்த மால்டா தீவின் நீளம் 17 மைல்; அகலம் 9 மைல். 1814ம் வருஷத்திலிருந்து இது பிரிட்டிஷாருடைய சுவாதீனத்திலிருந்து வருகிறது. இந்த இரண்டு பிரதேசங்களினாலுமே, மத்தியதரைக் கடலில் பிரிட்டிஷாரின் செல்வாக்கு அதிகமாயிருக்கிறது.

1935ம் வருஷம் இத்தலி அபிசீனியாமீது படை யெடுத்தபோது, முஸோலினி பிரிட்டிஷாருடைய இந்த மத்திய தரைக் கடலாதிக்கத்தைப் பலமாக ஆட்சேபித்தான். இன்னமே ஸ்பெயினில் கலகம் ஏற்பட்ட காலத்திலும் பிரிட்டிஷ் செல்வாக்கு ஆட்சேபிக்கப்பட்டது. இதனாலேயே தற்போது நடைபெறுகிற யுத்தமெல்லாம் மத்தியதரைக் கடலை யொட்டியே நடைபெறுகிறது.

சிறு கதை

உஜ்வலினி

(முன் தொடர்ச்சி)

5

1919ம் வருடம் தேசமெங்கும் ஒரே கலவரமாயிருந்தது. ஜாலியன் வாலா மைதானத்தில் நடந்த கோர சம்பவம் இந்தியர் உள்ளத்தைத் திடுக்கிடச் செய்தது. வடக்கே மேரு மலையிலிருந்து, தெற்கே கன்னியா குமரி வரைக்கும் நாடெங்கும் ஹர்த் தால்களும், கண்டனக்கூட்டங்களும் நடந்தன. மதுரையில் நடந்த கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து குழுமினார்கள். அக் கூட்டத்தில் பேசியவர்களில், இருபது வயதுள்ள ஒரு பெண்தான் தலை சிறந்து விளங்கினாள். அவள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அவளுடைய உள்ளத்திலிருந்து ஒலிப்பதுபோல் தோன்றியது. அத்தகைய ஆவே சத்தை ஒரு பெண்ணிடத்தில் எவருமே அதுவரை கண்டதில்லை.

அவள் ஆங்கில மாதாயிருந்த போதிலும், இந்தியர்களுக்காக இத்தனை ஆத்திரத்துடனும் உணர்ச்சி யோடும் பேசுகிறாளே என்று கூட்டத்தில் சிலர் ஆச்சரியமுற்றனர்.

அவள் ஆங்கில ஸ்திரீதான். இந்தி யாவிற்குவந்து, ஹிந்துவாகிவிட்டாள். காந்திஜியின் சிஷ்யை என்றார்கள் சிலர்.

அதொன்றுமில்லை. இங்கிலீஷ்காரி யாயிருந்தால், இவ்வளவு அழகாய்த் தமிழ் பேச முடியுமா? அவளை எனக்கு நன்றாய்த் தெரியும். தல்லாகுளத்தில் அவளுடைய வீடு என்றார் பக்கத்தி லிருந்த ஒருவர்

அவள்தான் உஜ்வலினி!

பஞ்சாப் படுகொலை நடந்த சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின், மஹாத்மா காந்தி ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தார். நூற்றுக் கணக்கான வக்கீல்கள் தாங்கள் இனிக் கேஸ் கட்டைத் தொடுவ தில்லை; கோர்ட் வாசலை மிதிப்பதில்லை என்று சபதம் செய்தார்கள். எத் தனையோ நீதிபதிகளும், மாஜிஸ்தி ரேட்டுக்களும் தங்கள் உத்தியோகங் களை உதறித் தள்ளினார்கள். ஆயிரக் கணக்கான மாணவர்கள் ஹைஸ்கூல் களையும் கல்லூரிகளையும் விட்டு வெளி யேறினார்கள். இவ்வனைவரும் காந்திஜி யின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, கள்ளுக்கடை மறியல், விதேசி ஜவுளிக்கடை மறியல், கவர்ன் மெண்ட் ஆபீஸ் மறியல், சட்டசபை பகிஷ்காரம் முதலிய பல்வேறு துறை களில் மூனைந்து வேலைசெய்ய முயன்றனர். நாடெங்கும் ஒரு தேசியப் புயல் கிளம்பியதுபோல் தோன்றியது. சிறைச்சாலைகளில்

எல்லாம் வக்கீல்களும், நீதிபதிகளும், மாணவர்களுமாய் நிறைந்தனர். அப்புயலில் உஜ்வலினியும் அடித்துக் கொண்டு போகப்பட்டாள்.

சீர்திருத்தம் வீட்டில் ஆரம்பிக்க வேண்டும் என்ற கொள்கைப்படி, உஜ்வலினி தன் சகோதரன் சங்கரனை தன் வசமாக்க முயன்றாள். இப்பொழுது சங்கரன் ஆபீஸ் ஹெட் கிளார்க் ஆகிவிட்டான். இரண்டொரு வருடங்களில் மாஜிஸ்டிரேட்டாய் விடலாம் என்ற நம்பிக்கையுமிருந்தது. ரெவென்யூ, கிரிமினல், அக்கவுண்ட்— மூன்று பரீக்ஷைகளையும் அவன் பாஸ் பண்ணிவிட்டதால், அவன் பெயரை மாஜிஸ்டிரேட் ஜாபிதாவில் சேர்த்திருந்தார்கள். வேலை ஏதாவது காலி விழவேண்டியதுதான் தாமதம். அவன் மாஜிஸ்திரேட்டாகி விடுவான். இத்தகைய அரிய சந்தர்ப்பத்தில் வேலையை விட்டு சத்தியாக்கிரஹ இயக்கத்தில் சேருவது சுத்தப் பைத்தியக்காரத்தனம் என்பது அவனுடைய அபிப்பிராயம். உஜ்வலினியின் வார்த்தைகள் அவன் காதில் ஒன்றுமே ஏறவில்லை. ஆகையால் அவள் கலெக்டர் ஆபீஸையே மறியல் செய்ய வாரம்பித்தாள். அவளுடைய கண்களில் நீர் ததும்ப ஆபீஸிற்குமுன்னால் நின்றுகொண்டு, இரு கைகளையுங் கூப்பி, "அண்ணா ஆபீஸிற்குச் செல்ல வேண்டாம். நீ சர்க்காருக்குச் செய்யும் ஒவ்வொரு சேவையும், அன்னை பாரத தேவியின் அடிமைச் சங்கிலியில் ஒரு கண்ணி சேர்ப்பது போலாகும்" என்று கூறியகாட்சி கல்லுங் கரையுந்தகையதாயிருந்தது. ஆனால் சங்கரன் அதையும் மீறி ஆபீஸ் சென்றுவிட்டான். உஜ்வலினி கைது செய்யப்பட்டு ஒரு வருடம் வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டாள்.

அவள் சிறை சென்ற இரண்டு மாதங்களுக்குப் பின், சீதாராமய்யரிடமிருந்து அவளுக்கு ஒரு கடிதங் கிடைத்தது. அதில் எழுதியிருந்த விஷயத்தைக் கண்டதும் அவள் திடுக்கிட்டாள்.

"பிரிய உஜ்ஜீ!

கடவுளுடைய லீலா விநோதங்கள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இவ்விஷயத்தை யறிந்ததும் நீ பிரமித்துப் போவாய். இதை உனக்கு எழுதும்போது, என் மனம் என்ன பாடு படுகிறதென்பது, ஈஸ்வரனுக்குத்தான் தெரியும். அம்மா அழும் அழுகைக்கு அளவேயில்லை. சங்கரன் இறந்துவிட்டான்! ஆம், அப்படித்தான் சொல்லவேண்டும். நம்மைப் பொறுத்தமட்டிலும், ஹிந்து தர்மத்தைப் பொறுத்தமட்டிலும், அவன் இறந்தவனே! இப்பொழுது அவன் சங்கரனில்லை; மகம்மது இப்ராஹிம் சாஹெப்!

ஒரு மாஜிஸ்திரேட் உத்தியோகம் காலி விழுந்தது. அது மகம்மதியர்களுக்கு உரியதாம். மகம்மதியர்கள் எவருமே மூன்று பரீக்ஷைகளிலும் தேறியவர்கள் இல்லாததால், அது காலியாகவே இருந்தது. உனது அண்ணா மகம்மதிய மதத்தில் சேர்ந்து, இப்பொழுது மாஜிஸ்திரேட் உத்தியோகம் வகிக்கிறான். நாங்கள் என்ன சொல்லியும் அவன் கேட்கவில்லை.

இங்ஙனம்
உனதன்புமிக்க தந்தை,

....

தன் சகோதரனின் அடிமைப் புத்தியை நன்கு அறிந்திருந்த உஜ்வலினிக்கு இதில் ஆச்சரியம் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை.

6

ஒருநாள் கைதிகளெல்லாம் குளிக்கப் போகும் பொழுது, புதுக் கைதி ஒருவன் செல்வதை உஜ்வலினி தன் கொட்டடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய முகத்தை அவளால் பார்க்க முடியவில்லை. ஆயினும் அவன் புடையிலிருந்தும், பின் தோற்றத்திலிருந்துமே, அவனை அவள் எங்கோ முன்பு பார்த்திருப்பது போல் தோன்றியது. எங்கு பார்த்திருக்கிறாள், எப்பொழுது பார்த்திருக்கிறாள் என்பதுமட்டும் அவளுக்குச் சீக்கிரம் ஞாபகம் வரவில்லை. ஆகையால் குளிக்கப்போன கைதிகள் திரும்பி வரும் வரைக்கும், அவள் கொட்டடிக் கதவண்டையே நின்று காத்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் கைதிகளுந் திரும்பி வந்தார்கள். அக்கூட்டத்தில் அப்புதுக் கைதி எங்கிருக்கிறான் என்று தேடினாள். ஆம், அவன்தான். சந்தேகமில்லை. ஜெயராஜ் தான்! அவளுடைய இதழ்களில் ஒரு புன்னகை பூத்தது. அதேசமயம் ஜெயராஜின் பார்வையும் அவள்மீது விழுந்தது. அவன் முதலில் சற்றுத் திடுக்கிட்டுப் பின்னடைந்தான். பின்னர், அவளை அங்குப் பார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்பது போல் புன்முறுவல் செய்துகொண்டு போய்விட்டான்.

அநேக வருடங்களுக் கப்புறம், பால்ய சிநேகிதர்களிருவரும் இன்று மீண்டும் சந்தித்தார்கள். உஜ்வலினியின் கலியாணத்திற்குச் சற்றுமுன்பே ஜெயராஜ் அவளை விட்டுப்பிரிய நேர்ந்தது. அவளுடைய தகப்பனார் தன் சொந்த ஜில்லாவாகிய திருச்சிராப்பள்ளிக்கே தன் உத்தியோகத்தை மாற்றிக்கொண்டு போய்விட்டார். உஜ்வலினிக்குக் கலியாணம் ஆனது ஜெயராஜுக்குத் தெரியும். ஆனால் அவள் விதவையான சமாச்சாரம் அவனுக்குத் தெரியாது. அவன் உஜ்வலினிக்கு ஒன்றிரண்டு கடிதங்கள்கூடப் போட்டான். ஆனால் அவள் அவைகளுக்குப் பதில் ஒன்றும் எழுதவில்லை.

உஜ்வலினியும், ஜெயராஜும் சிறையில் அநேக முறை சந்தித்தார்கள். ராஜீயக் கைதிகளிடைய கண்டிப்பான கட்டுப்பாடில்லாததால், அவர்கள் ஒருவரோடொருவர் சம்பாஷிக்கவும் சந்தர்ப்பங் கிடைத்தது. ஜெயராஜைக் காணும்பொழுதெல்லாம், உஜ்வலினி சற்று நாணித் தலை குனிவாள். ஆனால் ஜெயராஜ் பழைய சகஜபாவத்துடனேயே அவளுடன் பேசவாரம்பித்தான். அவள் வைதவ்யமடைந்த பரிதாப வரலாற்றைக் கேட்டு அவன் கண்ணீருகுத்தான்.

அவர்களுடைய நட்பு வளரலாயிற்று. சிற்சில சமயங்களில் அவளையறியாமலே, அவளுடைய கண்கள் ஜெயராஜின் கண்களைச் சந்தித்தன. உஜ்வலினி வாசிப்பதற்காக, ஜெயராஜ் அநேக புத்தகங்கள் கொடுத்து உதவினான். அவைகள் பெரும்பாலும் அரசியலைப்பற்றியும், அபேதவாதத்

தைப்பற்றியுமே இருக்கும். மதத்தைப் பற்றி அவன் அதிகக் கவலை எடுத்துக் கொள்வதில்லை. அது சம்பந்தமான நூல்களையும் அவன் வாசிப்பது கிடையாது. என்றாலும் ஒருநாள் அவன் உஜ்வலினிக்குக் கொடுத்த புத்தகங்களில் சுவாமி தயானந்தர் எழுதிய சத்தியார்த்தப் பிரகாசமும், ஈஸ்வர சந்திர வித்யாசாகரர் விதவா விவாகத்தைப்பற்றி எழுதிய புத்தகமும் இருந்தன. அப் புத்தகங்களின் அட்டைகளில், ஜெயராஜின் சொந்தக் கையெழுத்தில், "ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கியது; ஊன்றிப் படித்தல் அவசியம்" என்று எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் உஜ்வலினியின் செவ்விதழ்களில் இலேசாக ஒரு புன்முறுவல் தோன்றி மறைந்தது.

அவர்களுடைய தண்டனைக் காலம் முற்றுப்பெறவே இருவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். உடனே தான் வெகு நாட்களாய்ப் பார்க்க முடியாத தன் தாய்தந்தையரைப் பார்க்க வேண்டுமென்று உஜ்வலினி விரும்பினாள். ஆனால் அப்பொழுது வடநாட்டிலிருந்து ஒரு காங்கிரஸ் தலைவர் சென்னைக்கு வந்திருந்தார். அவரைத் தரிசித்துவிட்டு வரலாமென்று ஜெயராஜ் சொன்னான். இருவரும் சென்னை புறப்பட்டார்கள். அங்கு ஒரு ஹோட்டலில் இருவரும் ஒரே அறை எடுத்துக்கொண்டு தங்கலாமென்று ஜெயராஜ் கூறினான். அதற்கு உஜ்வலினி யாதொரு ஆக்ஷேபணையுஞ் சொல்லவில்லை.

காங்கிரஸ் தலைவர் சென்னையை விட்டுச் சென்று இரண்டு தினங்களாகின்றன. ஆனால் உஜ்வலினியும், ஜெயராஜும் இன்னும் சென்னையை விட்டுப் புறப்படவில்லை. அதில் அசம்பாவிதம் எதுவுமிருப்பதாக உஜ்வலினிக்குத் தோன்றவில்லை.

அன்று இரவு போஜனம் முடிந்ததும், "கடற்கரைக்குப் போகலாம், வருகிறாயா?" என்று கேட்டான் ஜெயராஜ்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன்" என்றாள் உஜ்வலினி.

பங்குனி மாத இரவு. பூமியில் கடல் ஒலித்துக்கொண்டிருந்தது; ஆகாயத்தில் கார்மேகங் குமுறியது. மதியென்னும் நங்கை மேகங்களினிடையே ஒளிந்து விளையாடிக்கொண்டிருந்தாள். ஒரு மேகம் விரைவாக ஓடி அவளைப் பிடித்துத் தன்னுள்ளடக்க முயற்சிக்கும். அதற்குள் நிலாப் பெண், 'என்னைப் பிடிக்க உன்னால் முடியுமோ?" என்று சொல்லி மேகத்திரையைக் கிழித்துக்கொண்டு வெளியேறிச் சிறிதுதூரம் நிர்மலமான நீலவானில் செல்வாள். அப்பொழுது அதனுடைய பொன்கிரணங்கள் படக் கடல் நீர் தங்கத்தை உருக்கித் தழல் குறைத்து நீராக்கி எங்குஞ் சிந்தியதோர் இங்கிதமாய்த் தகதகவென மின்னும்.

"ஆஹா! கடல் நீர் எவ்வளவு அழகாய்த் தோன்றுகிறது உஜ்ஜி!" என்றான் ஜெயராஜ்.

மீண்டும் ஒரு கரிய மேகம் நிறைப்பெண்ணைச் சிறை செய்தது. கொஞ்ச தூரஞ் சென்றதும், "நான்தான் இதோ தப்பித்துவிட்டேனே!" என்று

கொண்டல் கதவை உடைத்துக் கொண்டு கிளம்பினாள் நிலாமங்கை.

'ஜெயராஜ்! நிலாவும் மேகங்களும் விளையாடுவதைப் பார்த்தால் எனக்கு பாலிய ஞாபகங்கள் வருகின்றன.'

'உஜ்ஜீ! சந்திரன் செல்கிறதா, மேகம் செல்கிறதா?'

நான் செல்கிறேனா, நீ செல்கிறாயா என்று கேட்பதுபோலிருக்கிறது.'

பிறகு வெகு நேரம்வரை இருவரும் மௌனமாய்ச் சென்றுகொண்டிருந் தார்கள். பின்னால் வரப்போகும் இடியையோ, மழையையோ எச்சரிப் பதுபோல், ஆகாயத்தில் மின்னற் கொடி துவண்டது:

உஜ்ஜீ!

ஏன்?

'நான் நாளை ஆரிய சமாஜத்தில் சேர்ந்து சுத்தி செய்துகொள்ளப் போகிறேன்.' ஜெயராஜின் குரல் தடுமாறியது.

உஜ்வலினி ஒன்றும் பதில் சொல்ல வில்லை.

'உஜ்வீக் காந்தன் என்று பெயர் வைத்துக்கொள்ளப் போகிறேன். உன்னுடைய அபிப்பிராயம் என்ன?'

'மதம் மாற்றுவதும், பெயர் மாற்று வதும், அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது. அதில் பிறருடைய அபிப்பிராயத்திற்கு இடமே இல்லை.

சிறிது நேரம் மீண்டும் ஜெயராஜ் மௌனமாய்ச் சென்றான். பின்னர், 'விதவா விவாகத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?' என்று கேட்டான்.

'அது அவரவர் இஷ்டத்தைப் பொறுத்தது.'

'சாஸ்திர விரோதமென்று நீ எண்ணுகிறாயா?'

'இப்பொழுது நான் அப்படி எண்ணவில்லை.'

பின்?

உஜ்வலினிக்கு இக் கேள்வியின் அர்த்தம் விளங்கவில்லை. அவள் பேசா மலிருந்தாள்.

ஜெயராஜ் மீண்டுங் கேட்டான். உன்னிஷ்டம் என்ன?

உஜ்வலினியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. பதில்சொல்ல அவளுக்கு நா எழவில்லை. கடைசியில் மிக்க மனோ வேதனையுடன், 'நான் விதவையாகவே இறப்பேன்' என்றாள்.

ஜெயராஜின் உள்ளத்தில் ஓரிடி விழுந்தது போலிருந்தது. ஆகாயத் தில் சந்திரனை ஓர் கார்மேகம் கவ்விக் கொண்டது. எங்கும் இருள் சூழ்ந்தது. அகத்திலும் இருள்; புறத்திலும் இருள். அவ்விருளில் ஜெயராஜ் மறைந்துவிட்டான். இடி இடித்தது; மழை பெய்தது!

மறுநாட்காலை உஜ்வலினி சென் னையை விட்டுப் புறப்பட்டாள். இரா மேஸ்வரம் எக்ஸ்பிரஸ் இரவு 9-30

மணிக்கு மதுரை வந்து சேர்கிறது. உஜ்வலினி வீட்டிற்குப் போன பொழுது மணி பத்தரையாகிவிட்டது. சீதாராமய்யர் பங்கஜம்மாளிடம் சொல்லிக்கொண்டிருக்கிறார். 'ஈசனின் திருவிளையாடல்கள் இருந்தவாறென்னே! ஆங்கிலத் தாய் தந்தையருக்குப் பிறந்த உஜ்வலினி, நம் பாரதநாட்டிற்காக உழைக்கிறாள், சிறை செல்கிறாள். மறுமணம் செய்துகொள்ள மறுக்கிறாள். ஆனால் நம் சொந்தப் பிள்ளை சங்கரனோ கேவலம் ஒரு மாஜிஸ்திரேட் உத்தியோகத்திற்காக, மகம்மதிய மதத்தில் சேர்ந்து, மகம்மதியப் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டிருக்கிறான்."

'உஜ்ஜியின் தண்டனைக்காலந்தான் முடிந்துவிட்டதே. இன்னும் அவள் ஏன் வரக் காணோம்! அவள் முகத்தைக் கண்டாவது நான் ஆறுதல் அடைவேனே!" என்று ஏங்கினாள் பங்கஜம்மாள்.

உஜ்வலினி சித்தப் பிரமை கொண்டவள்போல், கதவைத் தடதடவெனத் தட்டினாள்.

"அப்பா! நீங்கள் என்ன சொன்னீர்கள்!" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"நான் என்னம்மா சொன்னேன், ஒன்றும் சொல்லவில்லையே" என்று பேச்சை மறைக்க யத்தனித்தார் சீதாராமய்யர்.

ஆனால் உஜ்வலினி பிடிவாதமாயிருந்தாள். தன் கதை முழுவதையும் அறிந்தவுடன், அவளால் ஒரு கணமும் அங்கிருக்க முடியவில்லை. சென்னைக்குச் சென்று ஊர் முழுவதும் ஜெயராஜைத் தேடிப் பார்த்தாள். எங்கும் அகப்படவில்லை. அவளுடைய உள்ளத்தில் ஒரு பெரிய கேள்வி எழுந்தது: "ஜெயராஜ் எங்கே!" பூமியில் ஒலிக்குங் கடலையும், ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மேகங்களையும், பாதையில் செல்லும் ஆண், பெண்களையும், சாலையில் பறக்குங் கார்களையும், மணிக் கூண்டிலிருக்குங் கடிகாரத்தையும் அவளுடைய உள்ளம் அதே கேள்வியைத் தான் ஓயாது கேட்டது. "ஜெயராஜ் எங்கே!" கடல் எப்பொழுதும் போல் சப்தித்துக் கொண்டிருந்தது; மேகங்கள் எங்கோ விரைவாய்ச் சென்றன. தலைவிரி கோலமாய்த் திரியும் இப்பெண்ணைப் பாதையில் செல்லும் எவரேனும் கவனிக்கவில்லை. கார்கள் அங்கு மிங்கும் அலக்ஷியமாய்ச் சென்றன. அவைகளுக்கு இவளைப் பற்றி என்ன கவலை? தூரத்திலுள்ள கடிகாரம் மணியடித்தது. அவளுடைய கேள்விக்குப் பதில் சொல்லுவார் எவருமில்லை

நீலவானக் கடலில் மின்னும் விண்மீன்கள் உஜ்வலினியைக் கண் சிமிட்டிப் பரிகசிப்பது போல் பிரகாசித்தன. மானிட வாழ்க்கையைக் கண்டால், அவைகளுக்கு அத்தனை ஏளனம்!

—ஸர்தார் இக்பால் அலிஷா

இத்தலியும் இஸ்லாமும்

ஏறக்குறைய முப்பது வருஷங்களுக்கு முன்னர் டிரிபோலி யுத்தம் நடைபெற்றது. 1912ம் வருஷம்வரை ஆப்ரிக்காவின் வடபாகத்திலுள்ள டிரிபோலியானது துருக்கியின் ஆதீனத்திற்குட்பட்டிருந்தது. இங்கே இத்தலி தன்னுடைய செல்வாக்கை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக துருக்கியுடன் போர் புரிந்தது. இதில் இத்தலியே வெற்றியடைந்தது. இந்த யுத்தம் நடைபெறுவதற்கு முன்னர்வரை, இத்தலியினிடத்தில் முஸ்லீம்களுக்கு ஒருவித நல்லெண்ணம் இருந்தது. ஆனால் டிரிபோலி யுத்தத்திற்குப் பிறகு முஸ்லீம்களிடையே இத்தலிக்கு விரோதமான எண்ணம் பரவ ஆரம்பித்தது. மொராக்கோவிலிருந்து கீழ்நாடுகள்வரை இந்த விரோத உணர்ச்சி பரவிவிட்டது. இந்த உணர்ச்சி இப்பொழுது வலுத்து நிற்கிறதென்று சொல்ல வேண்டும்.

மேற்படி டிரிபோலி யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையில் லிபியாவிலுள்ள சுமார் பத்து லட்சம் முஸ்லீம்கள், தங்களுடைய தொழுகைக்காலத்தில் துருக்கி சுல்தானுடைய பெயரைச் சொல்ல அநுமதிக்கப்பட வேண்டுமென்று ஒரு பிரிவு இருக்க வேண்டுமென்று முஸ்லீம்கள் கூறினார்கள். இதை இத்தலியும் அங்கீகரித்துக்கொண்டது. துருக்கியின் அரசியல் ஆதிக்கம் லிபியாவில் இல்லாவிட்டாலும், மத விஷயத்திலாவது துருக்கியும் லிபியாவும் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்பதுதான் இஸ்லாமியர்களின் கருத்து. இத்தலியர்கள் மேற்கண்ட ஷரத்தை அங்கீகரித்தார்களேயாயினும் அதனைச் சரியாக நடைமுறையில் கொணரவில்லை. இது லிபியர்களுக்குப் பெரிய வருத்தத்தை உண்டுபண்ணியது. இதனால் சென்ற ஐரோப்பிய மகாயுத்தத்தின்போது, லிபியர்கள் இத்தலிக்கு விரோதமாகக் கிளம்பினார்கள். ஆனால் இதில் வெற்றி பெறவில்லை. அப்பொழுது இத்தாலியப் படைகளின் சேனாதிபதியாயிருந்த தளபதி கிராஸியானி என்பவர் எவ்வளவு அட்டூழியங்களைச் செய்தார் என்பதை இப்பொழுதும் லிபியர்கள் மறக்கவில்லை. தளபதி கிராஸியானி என்பவர் 1908ம் வருஷத்திலிருந்து எரீட்ரா மாகாணத்தில் ராணுவ ஊழியம் புரிந்தவர். 1921ம் வருஷம் இவருக்கு டிரிபோலியில் உயர்தரப் பதவியொன்று அளிக்கப்பட்டது. ரோம ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற புனிதமான தொண்டில் இவர் ஈடுபட்டார். ஸைரனேயிகா மாகாணத்திலிருந்து சுமார் எண்பதினாயிரம் அராபிய முஸ்லீம்களை ஸிட்ரா என்ற பாலைவனப் பிரதேசத்திற்கு நாடு கடத்திவிட்டார். இவர் காலத்தில் ஏற்பட்ட ஜனச்சேதம் கொஞ்சநஞ்சமல்ல. இங்ஙனமே கால்நடைகளுக்கும் அதிகமான சேதம் உண்டாயின. 192[illegible]ம்

வருஷத்தில் அராபிய முஸ்லிம்களுக்குச் சொந்தமாக எட்டு லட்சம் ஆடுகளும், எழுபத்தையாயிரம் ஒட்டகங்களும், பதினாலாயிரம் குதிரைகளும் இருந்தன. 1933ம் வருஷத்திற்குப் பிறகு, அதாவது இத்தாலியர்களின் அட்டூழியத்திற்குப் பிறகு, 98,000 ஆடுகளும், 2600 ஒட்டகங்களும் 1000 குதிரைகளும் இருந்தன. எருதுகள் 10,000லிருந்து 8700க்குக் குறைந்துவிட்டன. கழுதைகள் 9000லிருந்து 5000க்கு குறைந்துவிட்டன.

கிராஸியானி போன்ற இத்தாலிய அதிகாரிகள் மேற்கண்ட பலாத்கார முறையை அநுஷ்டித்தனர். வேறு சிலர் உள்ளத்திலே விஷத்தை வைத்துக் கொண்டு, உதட்டளவிலே சிநேகங் காட்டி, லிபியர்களுக்குத் தீங்கு விளைவித்தனர். உதாரணமாக லிபியாவின் கவர்னர்—ஜெனரலாக இருந்த தளபதி பால்போ என்பவர், லிபியர்களுடன் உறவு பூண்ட வண்ணம், அவர்களுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி இருபதினாயிரம் இத்தாலியர்களை 1942ம் வருஷத்திற்குள் லிபியாவில் கொண்டுவந்து குடியேற்றி விடுவதாகத் தீர்மானித்தார். இன்னும் இருபத்தைந்து வருஷத்திற்குள் ஐந்து லட்சம் இத்தாலியர்களைக் குடியேற்றிவிட வேண்டுமென்பது அவர் நோக்கம். ஆனால், லிபியாவில இத்தாலியர் கொண்டுள்ள அடிப்படையான நோக்கமென்னவென்றால் மத்திய தரைக் கடலில் தங்களுக்குச் சாதகமாக ஒரு ராணுவ ஸ்தலத்தை ஏற்படுத்திக் கொண்டு அதிலிருந்து மற்ற இஸ்லாமிய நாடுகளைப் பயமுறுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பது.

இத்தலியின் ஆக்ரமிப்புக்கு லிபியா உட்பட்ட பிறகு, லிபியர்களின் சுகாதாரமோ அல்லது கல்வி அபிவிருத்தியோ எந்த விதத்திலும் திருப்தி தரக்கூடியதாயில்லை. சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் லிபியாவின் ஜனத்தொகை 569,093. 1931ம் வருஷத்தில், அதாவது இத்தாலியருடைய ஆட்சி உச்ச ஸ்தானத்திலிருந்த காலத்தில் ஜனத்தொகையானது 521,914 ஆகக் குறைந்துவிட்டது. கல்வி அபிவிருத்தியைப் பார்க்கப் போனால், மூன்று வருஷங்களுக்கு முன்னால் 87 பள்ளிக்கூடங்களே இருந்திருக்கின்றன. பதினோராயிரம் பிள்ளைகளே படிக்கிறார்கள். உயர்தரங் கல்வியும் இப்படித்தான் இருக்கிறது. இந்த உயர்தரக் கல்வி பெற்றவர்கள், சாதாரண குமாஸ்தா உத்தியோகஞ் செய்யத்தான் லாயக்குள்ளவர்களே தவிர வேறு உயர்தர உத்தியோகங்களைப் பார்க்கும் ஆற்றல் படைத்தவர்களல்லர். சமீபத்தில் தளபதி பால்போ, இஸ்லாமிய கல்லூரியொன்றுக்கு அஸ்திவாரக் கல் நாட்டினார். இந்தக் கல்லூரியை ஸ்தாபித்த தன் நோக்கமென்னவென்றால் லிபியர்கள் உயர்தரக் கல்விக்காக எகிப்துக்கோ, டுனிஸுக்கோ போகக் கூடாதென்பதற்குத்தான்.

லிபியாவில் வசிக்கிற அராபியர்கள், பாசிஸ்ட் கட்சியில் சேருமாறு கட்டாயப் படுத்தப் படுகிறார்கள். தங்களுடைய மதக் குருககள்மாருக்குக் கூட, தங்கள் மதாசாரப்படி வந்தனஞ் செலுத்துவதோடு கூட பாசிஸ்ட் முறையிலும் வணக்கஞ் செலுத்துமாறு கூறப்படுகிறார்கள்; பத்து வயதுக்கு மேற்பட்ட எல்லா அராபிய

இளைஞர்களும், பாசிஸ்ட் அராபிய ஸ்தாபனத்தில் சேர வேண்டுமென்பது கட்டாய விதி. இவ்வளவு குறைகளையெல்லாம் தமது ஆட்சி முறையில் வைத்துக் கொண்டு, முஸோலினி 1937ம் வருஷம், 'இஸ்லாமின் ரட்சகர்' என்று தம்மைச் சொல்லிக் கொண்டார்.

1924ம் வருஷம், முஸ்லீம்களுக்கு விரோதமானதோர் எண்ணம் ரோமாபுரியிலே உண்டாக்கப்பட்டது. உலகத்தில் வெள்ளையர் ஆதிக்கம் அதிகமாகி விட்டதென்றும், இந்த ஆதிக்கத்தை எதிர்க்க முஸ்லீம்கள் அனைவரும் ஒன்று சேரப் போகிறார்களென்றும் ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டது. லண்டனுள்பட எல்லா ஐரோப்பிய தலை நகரங்களிலும் இந்த வதந்தி வைர்ஜிதம் செய்யப்பட்டது. அமெரிக்காவுக்கு, பிலிப்பைன் தீவுகளைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரிக்கைசெய்யப்பட்டது. இதற்கு மறு வருஷத்தில், அதாவது 1925ம் வருஷத்தில், கிழக்கு மத்திய தரைக் கடலோரமாயுள்ள முஸ்லீம்நாடுகளில் தனக்கு ஆதிக்கம் வேண்டுமென்று முஸோலினி வற்புறுத்திக்கொண்டு வந்தார். அந்த வருஷம் துருக்கியர்கள், ருஷ்யர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டு விட்ட படியால், ஏதேனும் பெரிய ஆபத்து ஏற்படக் கூடுமென்றும், எனவே, துருக்கிக்கு விரோதமாகத் தனக்கு உதவி புரியுமாறு கிரேட் பிரிட்டனையும் கேட்டார். இங்ஙனம், முஸோலினி, ஐரோப்பா கண்டத்திலே முஸ்லீம்களுக்கு விரோதமாகப் பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார். ஆனால் அதேசமயத்தில் கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் விரோதமாக முஸ்லீம்களிடையே பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார். இங்ஙனமே, யெமென் பிரதேசத்திலும், பெட்ரோல் முதலியவற்றை இத்தாலியர்களுக்குச் சொந்தமாக்கி விடும்படி, யெமென் இமாமிடம் அநேக தூதுக் கோஷ்டிகள் அனுப்பினர். அரேபியாவிலுள்ள முஸ்லீம்களை, பிரிட்டிஷாருக்கு விரோதமாகத் தூண்டி விடும் பொருட்டு, மேற்படிநாட்டில் இரகசியமாக ஆயுதங்கள் கொண்டு திணிக்கப்பட்டன. 1939ம் வருஷத்தில் மட்டும் சுமார் ஐம்பதினாயிரம் துப்பாக்கிகள் இங்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன.

இவ்வளது தூரம் முஸ்லீம்களுக்கு விரோதமாக இத்தாலியர்கள் செய்திருக்க, முஸோலினியை முஸ்லீம்கள் எப்படி நம்பக்கூடும்?

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் சேர்ந்து 1940ம் வருஷத்தில் 468267 விவாகங்கள் நடைபெற்றிருக்கின்றன. 1939ம் வருஷத்தில் 28573 விவாகங்களே நடைபெற்றிருக்கின்றன.

—"தேசிகன்"

கீதையருளிய கிருஷ்ணன் யார்?

"ஜோதி"யின், 1941-ம் வருஷ மார்ச்சு மாத இதழில், "நாகரிகம்" என்ற தலைப்போடு வெளிவந்திருக்கும், நமது நியாய சபைப் பகுதியைப் படித்த எனது அன்பு மிக்க நண்பர் ஒருவர், "அந்தப் பதினாறு பக்கமும் கண்ணாடி போட்டு வைக்கவேண்டிய பாகம்" என்று குறிப்பிட்டு எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். இது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. ஆனால் திரும்பவும் மூன்றாம் முறையாக அப் பகுதியைப் படிக்க என்னைத் தூண்டிற்று. என்னுடைய நண்பர், படித்து அனுபவித்துத்தான் எழுதியிருக்கிறார். கண்ணாடி போட்டு வைக்கப் போகிறாரா என்பதை நான் சொல்ல முடியாது அது அவருடைய இஷ்டம். இந்த உலகத்திலேயே, ஜனத்தொகை மிகுந்த தேசம், புராதனப் பெருமை வாய்ந்தது என்று பிறர் சொல்லவும், அதைக் கேட்டுப் பெருமை கொள்ளவும் உள்ள தேசம், அடிமை வாழ்க்கையிலே தன்னுடைய சகலத்தையும் இழந்துவிட்டுத் தனித்து நிற்கும் தேசம் நம்முடைய பாரத தேசம் ஒன்று; அடுத்தது சீனா. ஆனால், சீனாவையாவது ஒருவகையில் விலக்கிக் கணக்கிடமுடியும். ஏனென்றால், உலக சரித்திரத்தை நாம் சிறிதளவாவது ஆராய்ந்து பார்த்தோமானால், ஒரு தேசத்தை அல்லது நாட்டை ஆள்பவர்கள் அன்னியர்களாயிருந்தால், அவர்கள் அடக்குமுறையை நிதானமாகக் கையாள்வதையும், உள்நாட்டுச் சர்க்காராயிருந்தால், அடக்குமுறையை அளவு கடந்து உபயோகிப்பதையும் பார்க்கிறோம். மார்ஷல் சியாங்கய்ஷேக் சர்க்கார் கையாண்ட அடக்குமுறையால், சீனப் பொதுஜனங்களுக்கு சுதந்திரம் என்றால் என்ன, தேசம் என்றால் என்ன, தேசீயம் என்றால் என்ன, இந்த வகையான பாடங்களை உணர்ந்துகொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனாலேதான், ஜப்பான் போர் தொடுத்து இதுவரை சுமார் நான்கு வருஷங்களாகியும் சீனர்கள் ஜப்பானுடைய ஏகாதிபத்திய ஆசைக்குத் தலைவணங்க மறுத்துப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நவீன இயந்திர சாதனக் கருவிகள் பூரணமாக உடைய ஜப்பானை எதிர்த்து நிற்கும் சீனர்களிடத்தில் ஒரே ஒரு ஆயுதத்தைத் தவிர வேறு பலத்தை நாம் பார்க்க முடியவில்லை. அந்த ஒரு ஆயுதந்தான் என்ன? தங்களுடைய தாய்நாட்டின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காகத் தங்களுடைய உயிர் முதல் சகலத்தையும் இழக்கத் தயாராயிருக்கிற உறுதி. இந்தக் காரணத்தைக் கொண்டுதான், சீனாவை விலக்கிக் கணக்கிடவேண்டும் என்று நான் குறிப்பிடுகிறேன். நம்முடைய நிலைமையென்ன? நாற்பதுகோடி ஜனத்தொகையைக்கொண்ட நம்முடைய தேசம் அடிமையாயிருக்க ஏதேனும்

காரணங்களிருக்குமோ என்ற பல வகையான சந்தேகங்கள் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. சிறிய சிறிய தேசங்கள் கூட, தங்களுடைய சுதந்திரத்திற்காக, நம் கண் முன்னே பல அரிய தியாகங்கள் செய்து கொண்டிருக்க நம்முடைய தேசம், பல நூற்றாண்டுகள் கணக்காக அடிமைத் தளையை ஆபரணமாகப் பூண்டுகொண்டிருக்குமானால் அதிசயப்படவேண்டியதுதானே! இதற்கேதேனும் காரணங்களும் இருக்கத்தானே வேண்டும்! என்னுடைய இந்தச் சந்தேகங்களுக்குச் சில விடைகள் அந்த "நாகரிகம்" என்ற பகுதியில் கிடைத்தன. அப்படியானால், கண்ணாடி போட்டு வைக்க வேண்டும் என்று நண்பர் எழுதுவது என்னைப் பொறுத்தவரையில் பொருத்தந்தானே. இஃதிருக்கட்டும். அந்த நாகரிகம் என்ற பகுதி பனிரெண்டாம் பக்கத்தில், "கிருஷ்ணனை"ப் பற்றி சில வரிகள் எழுதப்பட்டிருக்கின்றன. அந்தச் சில வரிகளும், —ஆம், சில வரிகள் தான்—ஆராய்ந்து முடிவுகட்டிய வரிகள்; வாசகர்களின் சிந்தனா சக்தியைத் தூண்டக்கூடிய வரிகள். "மகா பாரத காலத்தில் கண்ணபிரான் ஒரு சிறந்த ராஜதந்திரியாகவும், தேசீய சுதந்திரத்தைக் காப்பாற்றி வைப்பதில் அதிக அக்கரை கொண்டவனாகவும் நடந்து வந்திருக்கிறான். கண்ணனைப் போல், அவனுக்குப் பிறகு வேறொரு க்ஷத்திரிய ராஜ தந்திரி, வீரன், மகாத்மா நமது நாட்டில் தோன்றவேயில்லை. அதனால்தான் நமது தேசம் சுதந்திரத்தை இழந்துவிட்டது" என்ற இந்தச் சில வரிகளிலே நமக்குக் காட்சியளித்துக் கொண்டிருப்பவன் எவனோ, அந்தக் கிருஷ்ணனைப்பற்றி இக் கட்டுரையில் எழுதவேண்டுமென்பதுவே என்னுடைய நோக்கம். வாசகர்களுக்கு இங்கு நான் ஒரு விஷயத்தை விளக்கிவிட வேண்டும். அதாவது, கிருஷ்ணனை, கடவுளாகவோ, அல்லது கடவுளின் அவதாரமாகவோ உங்களுக்குக் காட்சிப் படுத்துவதற்கோ, அவனுடைய செயல்களை, "கடவுளின் திருவிளையாடல்கள்" என்று வர்ணிப்பதற்காகவோ நான் இக் கட்டுரையை யெழுத முன்வரவில்லை. அவனை ஒரு மனிதனாக—நம்முடைய தலைவனாக—உங்களுக்கு முன்னே எழுதிக் காட்ட வேண்டுமென்பதே என் விருப்பம். அதுதான் உண்மையுமாகும். நான் ஒரு மனிதனாதலால், மனிதக் கண் கொண்டுதான் கிருஷ்ணனை நோக்குகின்றேன். அப்படியேதான் நீங்களும பார்க்க வேண்டும். இதனாலேயே, "கிருஷ்ணன்" என்ற பெயரால் நம்முடைய தலைவனை அழைக்கத் துணிந்தேன். கிருஷ்ணனுக்கு கடவுட் பட்டம் சூட்டியது பிற்காலத்தவர் செய்கை. இதைக் கோழைத்தனமான செய்கையென்றுங்கூடச் சொல்ல வேண்டும். தங்களுடைய சக்தியின்னது என்று அறியாத மனிதர்களிடையில், தன்னுடைய சக்தியைப் பூரணமாகத் தெரிந்து காரியங்கள் செய்பவனைக் கடவுளாகவும், அவனுடைய காரியங்களைக் கடவுளின் திருவிளையாடல்கள், அல்லது வரப்பிரசாத நிகழ்ச்சிகள் என்று கூறுவது சாதாரண ஜனங்களுடைய பண்டைக் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பழக்கம் "மனிதர்கள் தங்களுடை சக்தியைப் பார்க்கிலும், தங்களுடைய பலவீனத்தைத்

தான் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்கள்" என்று சாணக்கியன் கூறியது மேற்கண்ட ஜனங்களைப் பார்த்துத்தானோ என்னவோ! கிருஷ்ணனுக்குக் கடவுட் பட்டம் சூட்டியவர்கள், மனிதர்களாகிய நம்முடைய கூட்டத்திலிருந்து அவனைப் பிரித்து விட்டார்கள். அவனுடைய செயல்களைப் படிக்கும் நாம் பெருமை கொள்ளுகிறோமில்லை. பின்பற்றத் துணிகிறோமில்லை. ஆனால் ஆச்சரியப் படுகிறோம். பூஜிக்கிறோம். அதோடு சரி.

காரணங்களில்லாமல் காரியங்கள் நடைபெறுவதில்லையென்று சொல்வர் அறிஞர். எந்தத் தேசத்திலுமே, நிலைமைகளைப் பொறுத்துத்தான் தலைவர்கள் தோன்றுகிறார்கள்; அல்லது தோன்றும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. நிலைமைகளைப் பொறுத்துத்தான், அந்தத் தலைவர்களுடைய லட்சியங்கள் அமைகின்றன. அந்த லட்சியங்களைப் பொறுத்துத்தான், காரியங்களின் பலாபலன்கள் அமைகின்றன. கிருஷ்ணன் பிறந்த காலத்தில் நம்முடைய தேசத்தின் நிலைமை யென்ன! அது எவ்வாறிருந்தது?

வீரர்களுக்குக் கணக்கில்லை பரந்து கிடக்கும் நம்முடைய பாரத தேசத்தை பலபகுதிகளாக அரசர்கள் ஆட்சி செய்தார்கள். ஒவ்வொரு அரசனும் வீரனாயிருந்தான். வேதாந்த போதனைகள் தேசத்தில் உச்ச நிலையிலிருந்தன. அரசர்களுக்கு வழி காட்டிகளாகவும், நன்னெறியைக் கடைப் பிடித்து அந்த அரசர்கள் ஆட்சி செய்வதற்கு உதவியாளர்களாயும் இருக்க வேண்டிய அறிஞர்கள் நிவர்த்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். "இந்த உலகம் மாயை, வாழ்க்கை அநித்தியம்" என்பது இவர்களுடைய உபதேசமாயிருந்தது. கருமத்தைத் துறந்தார்கள். ஏன்? அது பிறவிக்கு வழி காட்டி விடுமாம். இதனால், தேச ஜனங்களிடையில், தான், தான் என்ற எண்ணம் வலுவடைந்தது. 'சமூகம்' என்ற மனப்பான்மை சிதைந்து விட்டது. சமூக ஒற்றுமை உடைந்து விடாது, அந்த ஒற்றுமையை உண்டாக்கவும், காப்பாற்றவும், அந்த சமூகத்திலுள்ள தனி மனிதரும், அந்த சமூகத்திற்காக என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டும்; அந்தக் கடமைகளுக்கு அவர்கள் எவ்வளவு தூரம் கட்டுப் பட்டிருக்கிறார்கள் என்பன போன்ற விஷயங்களை அந்த ஜனங்களுக்கு உணர்த்தவரில்லை. "நம்முடைய தேசத்து ஜனங்களுக்கு வழி காட்டிகளாகவும், உபதேசகர்களாகவும் இருந்தவர்கள், பெரிய மகான்களாகவும், தியாகிகளாகவும் இருந்தார்களென்பது உண்மைதான். ஆனால் அவர்கள் ஜனங்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்கவில்லை. மோட்சத்தில் வைத்த நம்பிக்கையால் அவர்கள், இந்த உலகத்தின் உண்மைகளை யிழந்து விட்டார்கள். அந்த மோட்ச மார்க்கத்தைக் கடைப்பிடிக்க முயன்ற அவர்கள், இந்த உலக மார்க்கத்தை இழந்து விட்டார்கள்" என்று சமர்த்த ராமதாஸ் கூறுவதாக ஓர் அறிஞர் வர்ணிக்கிறார். இந்த உபதேசத்தைச் செய்தவர்கள் ஞானிகளாயிருக்கலாம்; மகான்களாயிருக்கலாம். ஆனால் அந்த உபதேசத்தால் ஜனங்களிடையில் விளைந்தது என்ன? கோழைத்தனம். இந்த உபதேசங்கள் அவர்களை ஞானிகளாக்கவில்லை; கோழைகளாக்கின.

"பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து" என்று இன்றுங் கூட நம்முடைய தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி, இந்தக் கோழைத்தனத்தின் பரிணாமமல்லவா? தங்களை ஒரு அரசனுக்கு உட்படுத்துவாரில்லாததால், அரசர்கள் தங்களுக்குள் அடிக்கடி கலகம் விளைவித்துக்கொண்டிருந்தார்கள். ஜனங்களுக்குச் சேவை செய்யவேண்டிய அரசர்கள், தங்கள் வீரத்திலே கர்வங்கொண்டார்கள். வீரத்தை வெளிப்படுத்துவதற்கு யுத்தத்தைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் புலனாகவில்லை. அரசர்கள்தான் இப்படியென்றால், கவிஞர்களோ, இந்த அரசர்களுடைய பிரதாபங்களைப் பாடுவதையும், அவர்களை யுத்தத்துக்கு ஊக்குவிப்பதையுமே தங்களுடைய கடமையாகவும், கவித்துவமாகவும் கொண்டிருந்தார்கள். சாதாரண ஜனங்கள் முதல் அரசர்கள்வரை ஒவ்வொருவரும், தங்களுடைய நாடு, நாடு என்று எண்ணினார்களே தவிர, "பாரத தேசம்" என்று எண்ணவில்லை. "எங்களுடைய தமிழ் நாட்டரசன் இமயம்வரை வென்று கொண்டிருந்தான்" என்று நம்முடைய "தமிழ்ப் பெருமக்களில்" சிலபேர் இன்றுங் கூடப் பெருமையடித்துக்கொள்வதை நாம் கேட்கிறோமில்லையா? இதில் பெருமையென்ன வேண்டியிருக்கிறது? சிறுமையல்லவா? நமக்கு அவமானமல்லவா? ஆனால் அவமானம என்ற உணர்ச்சிகூட இல்லையானால், அவமானம் ஏற்படுவதுதான் எப்படி? தேசத்தின் சீர்கேடான இந்த நிலைமையில்தான் கிருஷ்ணன் பிறந்தான்.

கிருஷ்ணன் பிறந்தது சிறைச்சாலையில். வளர்ந்தது மலைகளும் காடுகளும் செறிந்த விவசாயிகள் வாழும் பகுதியில். அவனுடைய இளமைத் தொழில் பசு மேய்த்தல். இந்த நிலைமைகள் அவனை நல்ல புஜபல பராக்கிரமமுடையவனாகச் செய்தன. இளமையிலிருந்து எத்தனையோ இடர்களை அவன் சந்திக்கவேண்டியதிருந்தது. இதனால் தன்னுடைய சக்தியைக் கிருஷ்ணன் உணரமுடிந்தது. அதைக் காரியங்களில் புகுத்தினான். களங்கமற்ற விவசாயிகளிடையே வளர்ந்த கிருஷ்ணனுடைய உள்ளமும் களங்கமற்றதாயிருந்தது. அன்புக்கு ஆட்படுவான் கிருஷ்ணன்; ஆனால் அதர்மத்தைக் கண்டு சகிக்கமாட்டான். தேசத்தின் நிலைமையைப் பார்த்த அவன் மனம் புழுங்கியது. தேசத்தை ஒரு குடைக்கீழ் கொண்டுவருவதே தேசத்தின் சீர்கேடான நிலைமைக்குப் பரிகாரம் என்றுணர்ந்தான். அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டான். பாண்டவர்களைப் பொறுக்கியெடுத்தான். ராஜசூய யாகம் செய்வித்தான். இந்திரப் பிரஸ்தம் என்ற நகருண்டாக்கி பாண்டவர்களை அதற்கு அரசர்களாக்கிவிட்டு துவாரகைக்கு வந்தான். இன்றுங்கூட டில்லிக்கருகாமையில், இந்த இந்திரப் பிரஸ்தத்தின் இடிந்த கோட்டைகளை நமக்குக் காட்டுகிறார்கள். துவாரகைக்கு வந்த கிருஷ்ணன் என்ன கண்டான்? பகைவர்களால் அது சின்னாபின்னமடைந்திருந்தது. அதைச் செப்பனிடவும் பாதுகாக்கவும் முயன்றுகொண்டிருந்தான். ஆனால், அங்கே பாண்டவர்களுடைய அரசு குலைவதை இவன் எப்படி அறியமுடியும்? துரியோதனன், கபட எண்ணங்கொண்டு பாண்டவர்களை சூது விளையாடுவதற்கு வருமாறு ஓலை அனுப்பினான். சூது

விளையாடுவதற்காக வரும் அழைப்பை மறுப்பது யுத்தத்தில் புறமுதுகிட்டோடுவதற்குச் சமானம் என்பது அக்காலத்து க்ஷத்திரிய அரசர்களுடைய வழக்கு. இந்தச் சூதாட்டத்தில், பாண்டவர்கள் தங்களுடைய அரசையும் துறந்து வனம் நண்ண வேண்டியதாயிற்று. இதைக் கேட்ட கிருஷ்ணன் கவலை கொண்டானோ? இல்லை. துன்பமும் இடர்களுந்தான் மனிதர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு உதவியாயமைகின்றன என்று அறிஞர்கள் கூறுவார்கள். தன்னம்பிக்கையுள்ள கிருஷ்ணனைத் தன்னுடைய நண்பர்களான பாண்டவர்களுக்கேற்பட்ட இன்னல்கள் அதிர்ச்சியடையும்படிச் செய்யமுடியாதல்லவா? வனவாசத்தை முடித்துத் திரும்பிய பாண்டவர்கள் தங்களுடைய அரசுரிமையைக் கேட்டார்கள். கைக்கொண்டிருக்கும் ஆதிக்கத்தை, நயந்த வார்த்தைகளுக்கிணங்கி விட்டுக்கொடுப்பார் யாரும் உண்டோ? பாரத யுத்தம் மூண்டது. கிருஷ்ணன் அர்ச்சுனனுடைய சாரதியாயமர்ந்தான். கோரமான யுத்தத்தில் பாண்டவர்கள் வெற்றிபெற்றார்கள். தேசத்தின் அரசியல் நிர்வாகத்தை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்தான் கிருஷ்ணன். பாண்டவர்களுடைய தலைவன் தருமனை பாரத தேசத்தின் அரசனாக்கினான். இதுதான் பாரதக் கதைமூலம்; கிருஷ்ணனைப்பற்றி, அவனுடைய சரிதையைப்பற்றி நமக்குத் தெரியும் சாரம். இனி கிருஷ்ணனுடைய குண விசேஷங்களையும், அவனுடைய உபதேசங்களையும் சிறிது ஆராய்வோம்.

கிருஷ்ணனுடைய சொந்த வாழ்க்கை மிகவும் புனிதத் தன்மை வாய்ந்தது நாம் இன்று ஓவியங்களில் பார்க்கிறோமே, அதைக் கொண்டு கிருஷ்ணனுடைய புனித வாழ்க்கையை மதிப்பிடுவது மதியீனம். பிற்காலத்துப் பாகவதக்காரர்கள், தங்களுடைய பக்திப் பெருக்கால், கிருஷ்ணனைப் பரமாத்மாவாகவும், கோபிகைகளை ஜீவாத்மாவாகவும், ஜீவாத்மாக்களாகிய கோபிகைகள், தங்களுடைய சடலமாகிய ஆடையை உதறி எறிந்துவிட்டு பகவானாகிய கிருஷ்ணனோடு ஐக்கியப்பட்டுவிட்டதாகவும் கற்பனை செய்து பாடிவிட்டுப் போனார்கள். பெரும்பாலாக பக்திப் பெருக்கில் ஈடுபட்ட அறிஞர்கள், கடவுளையும் தங்களையுங்கூட நாயக, நாயகி பாவத்தில் வைத்துப் பாடுவது இயல்பு. பாகவதக்காரர்களுடைய மேற்கண்ட கற்பனையை, சித்திரக்காரர்கள் ஓவியத்தில் அப்படியே எழுதி நமக்குக் காட்சிப்படுத்துகிறார்கள்.

எதைச் சொல்லுகிறானோ அதை யோசித்துச் சொல்லும் சுபாவமுள்ளவன கிருஷ்ணன். ஏனெனில், அவனுடைய சொற்கள், பின்னே அவன் செய்யப்போகும் காரியங்களுக்கு முன்னறிவிப்பாயிருக்கும். மற்றவர்கள் தன்னைப்பற்றி என்ன சொல்கிறார்கள் என்று பார்க்கும் சுபாவம் கிருஷ்ணனிடத்தில் கிடையாது. அவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளைத்தான் உலகம் எதிர்பார்க்கும். அவனுடைய வார்த்தைகள் பொய்த்தது கிடையாது. அறிஞர்கள் அதை அறிந்திருந்தார்கள். அறியாதவர்கள் அவதிப்பட்டார்கள். தன்னுடைய சக்தியைக் கிருஷ்ணனைப்போல் வேறு யாரும் தெரிந்திருக்கவில்லை.

ஆதலால்தான் பிறருடைய சக்தியையும் அவன் தெரியமுடிந்தது. அரிய காரியங்களைச் செய்த கிருஷ்ணன், தான் மாத்திரம், எந்த ஒரு ஆடம்பரத்தையும் ஏற்றுக்கொண்டதில்லை. அவனுடைய எதிரிகளுங்கூட அவனது வாய்மைக்குத் தலை வணங்குகிறார்கள்.

பெரிய அரசியல் புரட்சி நடத்தி வெற்றி பெற்றான். தருமனை அரசனாக்கினான். சேவை மனப்பான்மை வளர்ந்து நிலைத்து நிற்பதற்காக, கீதையென்ற கர்ம சாஸ்திரப் பொக்கிஷத்தை நமக்குக் கொடுத்தான். இதைப்போன்ற ஒரு தர்ம நூல், இதற்கிணையான ஒரு நூல் இதுவரை இவ்வுலகத்தில் தோன்றவில்லையென்று பல துறைகளில் முன்னேறியிருக்கும் மேனாட்டாருங்கூட இன்றும் தலை வணங்கி ஒப்புக்கொள்ளுகிறார்கள். இந்தக் கீதை புத்தர் காலத்துக்குப் பிறகு எழுதப்பட்டதாகச் சிலர் கூறுகிறார்கள். இது வாதத்திற்குரிய விஷயமானதால் இதில் நான் நுழையத் தயாராயில்லை. பாரத யுத்தம் முதல் நாள் போர் ஆரம்பத்தில அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் செய்த உபதேசங்களின் சேர்க்கை, கீதையாகிய கர்ம சாஸ்திரம்.

குருக்ஷேத்திரத்தில் இருதாப்புச் சேனைகளும் யுத்தத்திற்குத் தயாராய் நிற்கின்றன. ஒருவர் மீதொருவர் பாணங்களைப் பொழியவேண்டிய சமயம். ஆனால், க்ஷத்திரிய வீரன் அர்ச்சுனன், பிரம்ம ஞானத்தைப் பற்றிக் கிருஷ்ணனிடத்தில் பேசத் தொடங்கிவிட்டான். அதுமட்டுமோ, சண்டை செய்ய மனமில்லாதவனாய் சன்யாசம் பெறுவதற்குத் தயாராகி விட்டான். "தந்தை, ஆசாரியன், நண்பன், மாதா, மனைவி, மகன், புரோகிதன் இவர்களில் யாரேனும் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறுவார்களானால், அல்லது தங்கள் கடமையினின்றும் வழுவுவார்களானால் அதற்குரிய தண்டனையைக் கொடுப்பதில் அரசன் பின்வாங்கக் கூடாது" என்று மனுஸ்மிருதி கூறும் அரச தர்மத்தை விட்டுவிட்டு, ஏ, கிருஷ்ணா! இந்தப் பூமண்டலமென்ன, மூன்று உலக அரசுரிமையும் இந்த யுத்தத்தின் மூலமாக எனக்குக் கிடைத்தாலும் நான் கௌரவர்களைக் கொல்லமாட்டேன். அவர்கள் என்னைக் கொன்றாலும் பாவாயில்லை என்று அர்ச்சுனன் கூறினான். "ஏ கிருஷ்ணா! என்னுடைய ஆத்மாவுக்குச் சிரேஷ்டம் எதிலிருக்கிறது என்பதைத் தயவுசெய்து எனக்குக் கூறுவாயாக" என்றும் கூறுகிறான். வேதாந்த உபதேசத்தால், நிவர்த்தி மார்க்க எண்ணங்கள் எவ்வளவு தூரம் வலுப்பெற்றிருந்தன என்பது அர்ச்சுனனுடைய மேற்கண்ட வாசகங்களை நமக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன அல்லவா?

"ஏ அர்ச்சுனா! நீ இந்த கர்ம பூமியிலே பிறந்திருக்கிறாய்; ஆகையால் கர்மம் செய்வதற்குத்தான் உனக்கு உரிமையுண்டு. கருமத்தின் பலனில் ஆசை வைத்துக் கர்மத்தைச் செய்யாதே. கருமத்திற்குத் தகுந்தவாறு, உன்னுடைய கருமத்திற்கு எந்தப் பலன் உண்டாக வேண்டுமோ அது அவசியம் உண்டாகவேசெய்யும்" என்ற கிருஷ்ணனுடைய உபதேச ஆரம்பங்களின் தொகுப்புத்தான்

கீதை ஒவ்வொரு மனிதனும் சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமையை வற்புறுத்திய நியாயங்கள் கீதைக்கு முன்னும் நம்முடைய தேசத்தில் நிலவியிருந்தன "எவனொருவன் கருமத்தைச் செய்கிறானோ அவனுக்கு ஐஸ்வர்யம் கிடைக்கிறது" என்பது மனுஸ்மிருதி வாக்கியம். ஆனால் பின்னே எழுந்த நிலைமைக்குத் தகுந்தபடி கீதை அவசியமாயிருந்தது.

கருமத்தை வலியுறுத்துவதற்காகத் தோன்றிய கீதையை, இந்தக் கர்ம சாஸ்திரத்தை, நம்முடைய தேசத்தில் பிற்காலத்தில் தோன்றிய அறிஞர்கள் அவரவருடைய கொள்கையை வலியுறுத்துவதற்கேதுவாக வியாக்கியானம் செய்துவிட்டார்கள் ஸ்ரீ சங்கராச்சாரியார், வேதாந்த தர்மத்தை நிலை நிறுத்துவதற்கான அனுசரணையில், கீதைக்கு வியாக்கியானம் செய்தார். கருமத்தை வலியுறுத்தும் கீதையை, அதற்கு நேர்மாறான நிவர்த்தி மார்க்கத்தை வலியுறுத்தும் வேதாந்த தர்மத்திற்கு அனுசரணையாக வியாக்கியானம் செய்துவிட்டார்கள். ஆச்சாரியார்கள், தங்களுடைய முக்தி மார்க்கத்தை வலியுறுத்துவதற்கேதுவாக வியாக்கியானம் செய்துவிட்டார்கள். பெரிய அறிஞர், ஞானி, ஒரு தர்மத்தை நிலைக்கச் செய்தவர் ஸ்ரீ சங்கராச்சாரியார். இவ்வளவு உயர்குணங்கள் பொருந்திய இந்த மகான், கர்ம சாஸ்திரமான கீதையை வேதாந்த மார்க்கத்திற்கு வியாக்கியானம்செய்ய எப்படித் துணிந்தார்? "மதப் பிரச்னைகளில் புகுந்துவிட்டவர்களுடைய அறிவானது விசாலமடைவதில்லை" என்று மேற்கண்ட வினாவுக்கு திலகர் சமாதானம் கூறுகிறார். தற்காலம் நடைபெறும் வாதங்களுக்குக்கூட பொருத்தமா யிருக்கிறதல்லவா?

கிருஷ்ணன் நம்முடைய தேசத்திலே, ஆம், நம்முடைய பாரத தேசத்திலேதான் பிறந்தான். இங்கே தான் அவன் கீதையை உபதேசித்தான். அவன் செய்த அரசியல் புரட்சிகள் நம்முடைய தேசத்திலே தான். அவனுடைய பிற்கால சந்ததியாராகிய நாம், அவன் பிறந்த பாரத தேசத்திலே பிறந்திருக்கிற நாம் எப்படியிருக்கிறோம்? நாற்பது கோடி மக்களாகப் பெருகியிருக்கும் நம்முடைய நிலைமையென்ன? "ஜோதி" வாசகர்களே! இதற்கு நீங்கள் பதில் கூறவேண்டாம். கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு வீட்டின் குழந்தைகள், ஒரு நாட்டின் பிரஜைகள் ஆகிய இவர்களைக் காட்டிலும், ஒரு வீட்டிலுள்ள பெற்றோர்களும், ஒரு நாட்டின் அரசனுந்தான் அதிகமான தவறுகளைச் செய்கிறார்கள்.

—செஸ்டர் பீல்ட்.

—வ. பார்த்தசாரதி.

ஒரு பெரிய மனிதனாயிரு

மகனே! பெரிய மனிதன் என்ற வார்த்தையை நீ அடிக்கடி கேள்விப் பட்டிருக்கிறாய். நீயும் இதனைப் பல பேர் விஷயத்திலும் உபயோகித்திருக்கலாம். பலரும் உன் விஷயத்தில் இதனை உபயோகித்திருக்கலாம். ஆனால் இதற்கு எத்தனை பேர் அர்த்தம் தெரிந்துகொண்டு உபயோகிக்கின்றனர் என்பது சந்தேகமான விஷயம். பெரிய மனிதன் என்று சொன்னால் உருவத்திலேயா? வயதிலேயா? பணத்திலேயா? அறிவிலேயா? தேக பலத்திலேயா? இவையொன்றிலுமே இல்லையென்றுதான் நான் சொல்வேன். பிறருடைய துன்பத்தைக் கண்டு சகியாமல் எவனொருவன் கண்ணீர் விடுகிறானோ அவன் பெரிய மனிதன். மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைப்பதற்காகத் தான் துன்பம் அனுபவிக்கிறானே அவன் பெரிய மனிதன். தனது கொள்கைக்காக, மரணத்தைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்கிறானே அவன் பெரிய மனிதன். இவர் எல்லோரும் கந்தைத் துணியை உடுத்திக்கொண்டிருக்கலாம்; கூழைக் குடிக்கலாம்; குடிசையில் வசிக்கலாம். ஆயினும் இவர்கள் பெரிய மனிதர்கள் தான். மனிதத் தன்மை யென்று சொன்னாலே, அது மனிதனுடைய அக வளர்ச்சியைத்தான் குறிக்கிறதே தவிர, புற வளர்ச்சியைக் குறிக்கவேயில்லை. ஒரு பெரிய மாளிகையில், சிறிய மனமுள்ள ஒருவன் வசித்துக் கொண்டிருக்கிறானென்று வைத்துக் கொள். அவனைப் பெரிய மனிதன் என்று சொல்ல உன் மனம் துணியுமா? அதைப்போலவே, ஒரு சிறிய குடிசையில் பெரிய மனதுள்ள ஒருவன் வசிக்கிறானென்று வைத்துக் கொள். அவனைச் சிறிய மனிதன் என்று நீ கூசாமல் கூறிவிடுவாயா? ஆதலின், குழந்தாய்! பெரிய மனிதன் என்பதற்கு சாதாரண ஜனங்கள் என்ன லட்சணம் வைத்துக் கூறுகிறார்களோ அதனை நீ அப்படியே பின்பற்றாதே. உலகம் சொல்வதையெல்லாம் நீ நம்பிக்கொண்டிருப்பாயானால் உனக்குத் தன்னம்பிக்கை யென்பதே இல்லாமற் போய்விடும்.

முற்காலத்தில், வீரம் என்று சொன்னால் அதில் சீலமும் அடங்கியிருந்தது. ஆனால் இந்தக் காலத்திலேயா? ஆகாயவிமானத்திலிருந்து நிரபராதியான ஜனங்களின்மீது எவனொருவன் அதிகமான குண்டுகளைப் பொழிந்து அதிகமான உயிர்ச் சேதத்தை உண்டுபண்ணுகிறானோ அவன்தான் வீரன் என்று கௌரவிக்கப்படுகிறான். அவனுக்குத்தான் 'விக்டோரியா கிராஸ்'' போன்ற பதக்கங்களைக் கொடுக்கிறார்கள். முற்காலத்திலே அப்படியல்ல. எவனொருவன் தன் தேக பலத்தையும் மனோ பலத்தையும் உயர்ந்த லட்சியங்களுக்காக உபயோகப்படுத்தினானோ அவனே வீரன் என்று போற்றப்பட்டான். எவனொருவன் தன் சகோதரர்களுக்

குத் தொண்டு செய்கிறானோ, அந்தத் தொண்டின்மூலம் அவர்களை உயர்த்துகிறானோ அவர்களைக் காப்பாற்றுகிறானோ அவன்தான் வீரன் என்று கௌரவிக்கப்பட்டான். இந்த வீரமெல்லாம் புறத் தோற்றத்திலே காணப்படுகிற வீரம். மனிதனுடைய அந்தரங்கத்திலே பிரகாசிக்கிற வீரம் ஒன்றுண்டு. மனச்சாட்சிப்படி நடத்தல், யோக்கியப் பொறுப்புடன் விவகாரங்களைச் செய்தல், தன்னுடைய சௌகரியங்களை மௌனமாக மறுத்துக்கொண்டுவிடுதல், உலகமெல்லாம் தன்னை இகழ்ந்தாலும், தான் சரியென்று நினைக்கிற ஒரு காரியத்தைச் செய்தல் ஆகிய இவையெல்லாமும் வீரமாகும். ஆனால் இந்த வீரம் வெளிப் பார்வைக்குத் தெரியாது. விசாலமான இருதயத்தில்தான் இந்த வீரம் குடிகொள்ளும். இந்த இருதயத்திலிருந்துதான் அன்பு உதயமாகும். அன்பு நிறைந்த இருதயமுடையவர்கள்தான் எந்தவிதமான துன்பங்கள் வரினும் அவற்றை ஏற்றுக்கொள்ளுஞ் சக்தியுடையவராக இருப்பர். அவர்களுக்குத்தான், தம்மை மறந்து தொண்டு செய்ய வேண்டுமென்ற ஊக்கம் உண்டாகும்.

யுத்தகளத்திலே நின்று போர் புரிகிறானே அவன் மட்டும் வீரனல்ல. அவன் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் யுத்தஞ் செய்கிறானென்பது வாஸ்தவம். தனது நாட்டிற்கும் ஜாதிக்கும் அழியாத புகழைத் தேடித் தருகிறானென்பதும் உண்மை. இப்படிப்பட்டவனை, ஒரு தைரியசாலி என்று சொல்லலாம். இவனிடத்தில் அருளும் அன்பும் இருந்தால்தான் இவனை வீரனென்று சொல்லலாம். இப்படிப்பட்டவன்தான் பெரிய மனிதன்.

மகான்கள் அல்லது பெரிய மனிதர்களென்று சொன்னால் அவர்கள் யுத்தகளத்திலே நின்று போர் புரிய வேண்டுமென்பதல்ல. அவர்கள் ஊரூராகச் சென்று பிரசங்கம் செய்துகொண்டிருக்க வேண்டுமென்றும் அர்த்தமில்லை. எவனிடத்தில் பெருந்தன்மை அதாவது மகான்தன்மை இருக்கிறதோ அவனை உடனே ஜனங்கள் தெரிந்துகொண்டுவிடுகிறார்கள். அவனிடத்திலுள்ள பெருந்தன்மையானது எப்படியோ தானே, ஜனங்களிடத்தில் வந்து முத்திரையிட்டுவிடுகிறது. ஜனங்களும் அவர்களுடைய வார்த்தைகளைச் செவி கொடுத்துக் கேட்கிறார்கள்.

பெரிய மனிதர்களுடைய யுத்த மைதானமெல்லாம், தாமே வலியத் துன்பமநுபவித்தல்; தன்னலத்தைத் தியாகஞ் செய்துவிடுதல். இதனால்தான் இவர்கள் இறக்கிறபோது, எவ்வித சின்னங்களும் இவர்கள் மார்பில் பிரகாசிப்பதில்லை. லட்சக்கணக்கான மக்கள் இவர்களைச் சூழ்ந்து துக்கக் கண்ணீர் வடிப்பதில்லை. அதற்கு மாறாக சந்தோஷப்படுகிறார்கள். யேசுநாதர் சிலுவையிலறையப்பட்ட காலத்தில் அவருக்காக இரக்கங் காட்டினவர் ஒரு சிலர்தான்; ஆனால் அவரைப் பரிகசித்து அவரைப் பலவாறு தூஷித்தவர்கள்தான் அதிகம். ஆனால் அவர் இவைகளுக்காக மனம் நொந்தாரோ? இல்லவே இல்லை. இதனாலேயே அவரை உலகமகாஜனங்கள் பக்தி சிரத்தையோடு போற்றுகிறார்கள். அவர் இறந்து

போன வரலாற்றைக் கேட்டு இப்பொழுது கோடிக்கணக்கான ஜனங்கள் கண்ணீர் உகுக்கிறார்கள். மனிதன், புகழுக்காகவும், வெற்றிக்காகவும் படைக்கப்படவில்லை. இவைகளைவிட மேலானதொரு லட்சியத்தை யடைவதற்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். "கடவுள் இந்தப் பூலோகத்தில் மனிதனுக்குச் சொற்ப ஆயுளையே கொடுத்திருக்கிறார். ஆனால் இந்தச் சொற்ப கால வாழ்விலே, அவனுடைய நித்திய வாழ்வு அடங்கியிருக்கிறது. இந்தச் சொற்ப கால வாழ்விலே, அவன் அநேக சத்துருக்களை வெற்றி கொள்ள வேண்டியிருக்கிறது; அநேக தீமைகளைத் தடுக்க வேண்டி யிருக்கிறது; அநேக ஆபத்துக்களைக் கடக்க வேண்டி யிருக்கிறது; அநேக தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டி யிருக்கிறது" என்று ஓர் ஆங்கில ஆசிரியன் கூறுகிறான். அதாவது மனிதனாகப் பிறந்துவிட்ட ஒருவன் எவ்வளவு எவ்வளவு காரியங்களைச் செய்யவேண்டி யிருக்கிறதென்று இதனால் நன்கு தெரியவரும். இவைகளைச் செய்கிறவர்கள் மனிதர்கள்; பெரிய மனிதர்கள்; மகான்கள். இந்தமாதிரியான மகான்கள் ஒவ்வொரு யுகத்திலும், ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றுகிறார்கள். அப்படிப்பட்டதொரு மகானாக நீ ஆகவேண்டாமா! பெரிய மனிதனாக வேண்டாமா!

பெரிய மனிதர்கள் அத்தனைபேருடைய சரித்திரத்தையும் நீ படித்துப் பார்த்தாயானால், அவர்கள் புகழையோ கீர்த்தியையோ பொருட்படுத்தாமல், மற்றவர்களுக்காகத் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். தாங்கள், தங்களுடைய கடமையைச் செய்துவிட்டோமென்ற திருப்திதான் அவர்களுக்குக் கிடைத்த சன்மானம்.

குழந்தாய்! உனக்கு ஒரு விஷயம் மட்டும் ஞாபகமிருக்கட்டும். அதாவது உலகத்திலே அநாவசியமான பொருள் ஒன்றுகூட இல்லை. ஏதோ ஒரு பிரயோஜனத்திற்காகத்தான் கடவுள் அவற்றைச் சிருஷ்டித்திருக்கிறார். அவற்றைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டுவது நமது கடமை. அதைப் போலவே நமது வாழ்க்கையில் ஏற்படுகிற ஒவ்வோர் அநுபவமும நமக்கு ஒவ்வொரு பாடந்தான். அதிலே ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அநேக சந்தர்ப்பங்களிலே, மனிதனுக்கு ஏற்படுகிற துரதிருஷ்டங்கூட அவனுக்கு அநுகூலமாகவே இருக்கிறது. ஏனென்றால் ஒரு மனிதனுக்குத் துரதிருஷ்டம் உண்டாகிறபோதுதான், அவனிடத்திலேயுள்ள மனிதத் தன்மைகள் யாவும் வெளிப்படுகின்றன. ஜெர்மானியக் கவிஞன் ஒருவன் கூறுகிறான்:— "எவனொருவன் கண்ணீர் விட்டுக்கொண்டே ரொட்டியைத் தின்கிறானோ, தனது படுக்கையில் அழுதுகொண்டே புரண்டு இராக் காலங்களைக் கழிக்கிறானோ அவனால்தான் தெய்வ சக்தியொன்று இருக்கிறதென்பதை அறிந்துகொள்ள முடிகிறது." எவ்வளவு அருமையான வாசகம் பார்த்தாயா? நமக்கு அவக்கேடுகள் ஏதேனும் ஏற்படுகின்றனவென்று சொன்னால், அவை, நம்மைப் பரிசோதிக்கவும் அதிலே நாம் வெற்றி யடையவும் கடவுளால் அனுப்பப்

—சார்லஸ் வெய்மர்

அமெரிக்காவும் சென்ற மகாயுத்தமும்

சென்ற 1914ம் வருஷம் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் மூண்ட யுத்தமானது பின்னர் ஐரோப்பிய யுத்தமாகப் பரிணமித்துவிட்டது. இந்த யுத்தத்தில் பிரிட்டனுள்பட நேசக் கட்சியார் ஒரு சார்பிலும், ஜெர்மனி மற்றொரு சார்பிலும் இருந்து போர் புரிந்தனர். யுத்தம் நடைபெற்ற நான்கு வருஷத்தில், முற்பகுதியில் ஜெர்மனிக்கே அதிகமான வெற்றிகள் கிடைத்து வந்தன. நேசக் கட்சியினரிடையில் அதிகமான கவலை ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமையில்தான் 1917ம் வருஷம் ஆரம்பத்தில் அமெரிக்கா, நேசக் கட்சியார் பக்கம் சேர்ந்தது. இங்ஙனம் அமெரிக்கா சேர்ந்ததற்கு என்னென்ன காரணங்கள் என்பது இந்தக் கட்டுரையில் ஆராயப்படுகிறது. தற்போதைய யுத்தத்தில் அமெரிக்கா ஈடுபடுவதைப்பற்றி அதிகமான பிரஸ்தாபங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற இந்தச் சமயத்தில் இந்தக் கட்டுரை பயனுடையதாயிருக்குமென்று நம்புகிறோம்.

1914ம் வருஷத்து ஐரோப்பிய மகா யுத்தத்தில் அமெரிக்கா தலையிட்டது சரியென்பதுதான் பெரும்பாலோருடைய அபிப்பிராயம். இங்ஙனம் அபிப்பிராயங் கொள்வோர், நேசக் கட்சியினருடைய நியாயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள்; அல்லது ஜெர்மனிக்கு விரோதமாகக் கொண்ட ஆத்திர உணர்ச்சியுடையவர்கள். ஒரு சிலருக்குத்தான், அமெரிக்கா ஏன யுத்தத்தில் கலந்து கொண்டதென்பதற்குக் காரணங்கள் தெரியும். இந்தக் காரணங்களை விவரித்தும், இது சம்பந்தமாக நடைபெற்ற கடிதப் போக்கு வரத்துக்களைச் சேர்த்தும் அமெரிக்கா அரசாங்கத்தார் சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஒரு நூலை வெளியிட்டிருக்கின்றனர். இதில் முழுவிவரங்களும் காணப்படுகின்றன.

யுத்தத்தில் கலந்து கொண்டிருந்த ஜெர்மானியர்களுக்கும் நேசக் கட்சியினருக்கும் 1916ம் வருஷம் ஒரு நெருக்கடியான வருஷமாயிருந்தது. ருஷ்யாவானது, ஜெர்மனியை எதிர்த்து எதிர்த்துச் சோர்ந்து போயிருந்தது. யுத்தத்திற்கெனச் சேகரித்து வைத்திருந்த தன் சக்திகளின் கடைசி அளவையும் அது இழந்து விட்டது. தவிர உள் நாட்டில் கலகங்கள் ஏற்படு..

படுகின்றனவென்று நாம் கொள்ள வேண்டும். இந்தத் துன்ப காலத்தில் நாம் சறுக்கி விழாமல் உறுதியாக நின்றோமானால் அப்பொழுதுதான் நாம் பெரிய மனிதராகிறோம். உனக்கு ஏதேனும் துன்பம் ஏற்படுமானால் நீ என்ன செய்யப்போகிறாய்? கையைக் கட்டிக்கொண்டு அழுது கொண்டிருக்கப்போகிறாயா? அழாதே. பெரிய மனிதனாக நடந்துகொள். தலை குனியாதே. தலை நிமிர்ந்து நட. அதனால் உனக்கும் உன்னைப் பெற்றெடுத்த குடும்பத்திற்கும் அதிக பெருமையுண்டு.

வதற்கான அறிகுறிகள் தோன்றலாயின. ஜெர்மானியர்கள் வெர்டூன் பிரதேசத்தைச் சுற்றி நடைபெற்ற யுத்தத்தில் ஏராளமான நஷ்டத்தை அடைந்து வந்தனர். ஸோம் நதிப் பிரதேசத்தில் நேசக் கட்சியினர் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்த மாதிரியுள்ள நெருக்கடியான நிலைமையில் தன்னைப் போன்ற ஒரு வல்லரசு சும்மாயிருக்க முடியாதென்பதை அமெரிக்கா உணர்ந்தது. யுத்தம் மும்முரமாகி விட்டபடியாலும், ஒவ்வொரு கட்சியினரும், சத்துருக்களை அழித்துத் தாமே வெற்றி கொள்ள வேண்டுமென்ற ஆவலுடையவர்களாக இருந்ததாலும், தங்களுடைய போர் வரம்பை விஸ்தரித்துக் கொண்டு போக முயன்றார்கள். இதனால், நடுநிலைமைப் பிரதேசங்களின் உரிமைகளில் இருகட்சியினரும் தலையிடத் தொடங்கினார்கள். இந்த நடுநிலைமைக் கட்சியினருடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென்று அமெரிக்கா கருதியது; கடமையாகவுங் கொண்டது. அப்படிப் பாதுகாக்க வேண்டுமானால், யுத்தத்தில் தலையிடவேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை. இங்ஙனம் தலையிடாமல், அதாவது ஐரோப்பிய விவகாரங்களிலே ஈடுபடாமல் ஒதுங்கியும் இருந்துவிடலாம். இப்படியிருப்பது அநேக விதங்களில் நல்லதென்பதும் அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனால் விதி அப்படியிருக்க விரும்பவில்லை. இதனால்தான் அமெரிக்கா ஐரோப்பிய யுத்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னேயே, நேசக் கட்சியினருக்கும் ஜெர்மனிக்கும் சமாதான ஒப்பந்தம் செய்துவிட வேண்டுமென்று ராஜதந்திரிகள் சிலர் முயன்றனர். 1916ம் வருஷத்தில் நடைபெற்ற இந்தச் சமாதான முயற்சிகள் பலிக்காமற் போனதால்தான், 1917ம் வருஷ ஆரம்பத்தில் அமெரிக்கா மேற்படி யுத்தத்தில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1916ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அமெரிக்கா அரசாங்கத்தாருக்கு லண்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானீகரிடமிருந்து பின்வருமாறு ஒரு தந்தி கிடைத்தது.

"பி அண்ட் ஓ கப்பலாகிய 'பெர்ஷியா' என்பது, அலெக்ஸாந்திரியா துறைமுகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கையில் நீர்மூழ்கிக் கப்பலினால் மூழ்கடிக்கப்பட்டது. ஏடனில் அமெரிக்க ஸ்தானீகர் பதவியை ஏற்றுக்கொள்ளச் சென்றவர் இந்தக் கப்பலிலேயே சென்றார். ஏறக்குறைய கப்பலிலிருந்த எல்லோரும் மூழ்கிவிட்டனர்"

"அமெரிக்க வியாபாரக் கப்பலை, ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலொன்று, போதிய முன்னெச்சரிக்கை கொடாமலும், பிரயாணிகளுக்குப் பாதுகாப்புக் கொடாமலும் மூழ்கடித்துவிடுமானால், அமெரிக்கப் பிரஜைகளின் உயிர் நஷ்டத்திற்கு ஜெர்மனியையும் அதன் நேசக் கட்சி அரசாங்கங்களையுமே அமெரிக்கா பொறுப்பாளியாக்கும்" என்று பிரஸிடெண்ட் வில்ஸன் உடனே கண்டிப்பாக உத்திரவு போட்டார். இந்த உத்திரவை, ஜெர்மனியானது கசந்த மனதோடு ஏற்றுக் கொண்டது. அப்படியே உறுதிமொழியும் கொடுத்

தது. ஆனால் இதன்படி அநுஷ்டானத்தில் நடக்கக்கூட அதற்கு இஷ்டமில்லை. வியாபாரக் கப்பல்களை பீரங்கி முதலிய தற்காப்பு ஆயுதங்களினால் பந்தோபஸ்து செய்ய வேண்டுமென்ற தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்கப் பிரிட்டிஷார் கொஞ்சங்கூடச் சம்மதிக்கவில்லை. ஜெர்மனியோ, ஆயுதந் தரியாத வியாபாரக் கப்பல்களைப் பொறுத்தமட்டில்தான், தன் உறுதிமொழியே தவிர, ஆயுதந் தரித்த வியாபாரக் கப்பல்களுக்கல்லவென்று சாதித்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் நிலைமையென்ன? ஆயுத பந்தோபஸ்துடன் செல்லும் அமெரிக்கப் பிரயாணிகள் செல்லக் கூடாதென்று நாம் தடுக்க முடியுமா? இதைப்பற்றி அமெரிக்க காங்கிரஸ் மகாசபையில் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றன. விளைந்த பயன் ஒன்றுமில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் 1916ம் வருஷம் மார்ச்சு மாதம் 26ந் தேதியன்று "ஸஸ்ஸெக்ஸ்" என்ற ஒரு கப்பல், ஜெர்மானிய நீர்மூழ்கிக் கப்பலொன்றால் மூழ்கடிக்கப்பட்டது. யுத்தத்தில் சம்பந்தப்படாமல் பிரயாணிகளாகச் சென்ற சுமார் எண்பது பேர் இதில் இறந்துபோயினர். இந்த இறந்துபோனவரிலே அமெரிக்கர்களும் இருந்தனர். உடனே அமெரிக்கா அரசாங்கம், தன் கண்டனத்தை ஜெர்மனிக்குத் தெரிவித்தது. பிரயாணிக் கப்பல்களையும் சாமான் கப்பல்களையும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு தாக்குவதென்கிற முறையை இன்னும் ஜெர்மனி வலியுறுத்திக்கொண்டு போகுமானால், ஜெர்மனியோடு அமெரிக்கா கொண்டிருக்கும் அரசியல் தொடர்பு அற்றுப் போகுமென்று பிரசிடெண்ட் வில்ஸன் ஜெர்மன் அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தனர். இதற்கு ஜெர்மனி இணங்கியது. வேறொரு நாட்டுக் கப்பலைப் பரிசோதிப்பது, பிரயாணிகளின் க்ஷேமத்தைப் பாதுகாப்பது முதலிய சம்பிரதாயத்தோடு, தான் நின்றுவிடுவதாக ஜெர்மன் அரசாங்கம் தெரிவித்தது. இஃது அமெரிக்காவுக்கு ஒருவிதமான வெற்றியென்று சொல்லவேண்டும்.

ஆனால் ஜெர்மனி, இந்த உறுதிமொழியைக் காப்பாற்றிக்கொள்ளவில்லை. அந்த உறுதிமொழியைக் காப்பாற்றிக்கொள்ளுமாறு அதற்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது? ஒன்றுமில்லை. 1916ம் வருஷம் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பதினைந்து கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்களாலோ, நாசகாரிக் கப்பல்களாலோ மூழ்கடிக்கப்பட்டன. இப்படிப்பட்ட நிலைமையில், ஜெர்மனி தன் உறுதிமொழிப்படி நடந்துகொண்டு வந்திருக்கிறதென்பதை எப்படி நிரூபிக்க முடியும்? இந்த உறுதிமொழியை அது வாபீஸ் வாங்கிக்கொள்ளாதென்பதற்கு என்ன ஆதாரம்? தன்னுடைய ராணுவ பலத்தைக்கொண்டு வெற்றியடைந்து அதன்மூலம் சமாதானத்தை யடைய அதனால் முடியாவிட்டால், கடைசி ஆயுதமாக, நீர்மூழ்கிக் கப்பல் யுத்தத்தைத் தீவிரமாக ஆரம்பிக்காதென்பதற்கு என்ன உறுதி இருக்கிறது?

• ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்கும், இந்தக் கடல் யுத்த சம்பந்தமாக நீண்ட கடிதப் போக்குவரத்துகள்

நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில், நேசக் கட்சியினரால் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட கஷ்டங்களும் அதிகம். ஜெர்மனிக்குள் எந்தவிதமான சாமான்களும் செல்லவொட்டாதபடி அநேக தடுப்பு முறைகளை நேசக் கட்சியினர் அநுஷ்டித்தனர். சுமார் 171 விதமான சாமான்கள், தடைப்பட்ட சாமான்களென்றும், இவை, ஜெர்மனிக்குள் எந்த நடுநிலைமை நாடும் கொண்டுபோகக் கூடாதென்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நீண்டதொரு ஜாபிதாவைத் தயாரித்து வெளியிட்டனர். இது விஷயமாகத் தங்கள் கண்டனத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு அமெரிக்க அரசாங்கத்தார் தெரிவித்தனர். அதிருஷ்டவசமாக, இந்தக் கண்டனமானது, பகிரங்கமான சண்டையாக முற்றவில்லை. இங்ஙனம், நேசக்கட்சியாருடனும் ஜெர்மனியினுடனும் அடிக்கடி அமெரிக்கா வாதப் பிரதிவாதங்கள் நடத்திவர வேண்டியிருந்தது. 1916ம் வருஷத்துக் கடைசிப் பாகம் மிகுந்த கவலையோடு கழிக்கப்பட்டது. சமாதான முறையிலேயே ஐரோப்பிய நிலைமையை ஒருவாறாகத் தீர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தளபதி ஹவுஸ் என்பவரை பிரசிடெண்ட் வில்சன் 1915ம் வருஷம் டிசம்பர் மாதம் ஐரோப்பாவின் முக்கியத் தலைநகரங்களுக்குச் சென்று வருமாறு அனுப்பினார். தளபதி ஹவுஸ் அப்படியே ஐரோப்பா வந்து அநேக ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசினார். பின்னர் இவர் 1916ம் வருஷம் பிப்ரவரி மாதம் பிரசிடெண்ட் வில்சனுடன் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டார். இதன்படி யுத்தத்தை நிறுத்தும் பொருட்டு பல வல்லரசுகளின் மகாநாடொன்று கூடவேண்டுமென்றும் இந்த மகாநாட்டுக்கு நேசக் கட்சியினர் இணங்கி, ஜெர்மனி மறுத்துவிடுமானால், அமெரிக்கா நேசக்கட்சியினருடன் சேர்ந்துவிடுமென்றும், அப்படி ஜெர்மனி சேர்ந்து அதன் பிடிவாதங் காரணமாக மகாநாடு முறிந்துவிடுமானால், அப்பொழுதும் அமெரிக்கா நேசக் கட்சியினருடன் சேர்ந்துவிடுமென்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. தளபதி ஹவுசின் "நியாயமான சமாதான திட்டங்கள்" பின்வருமாறு:— பெல்ஜியத்திற்கு, அதன் பழைய ஸ்தானத்தை அளிக்க வேண்டும். ஆல்சேஸ்—லொரேன் பிரதேசத்தை பிரான்சுக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். ருஷ்யாவுக்குக் கடல் தொடர்பு இருக்குமாறு ஒரு வழி ஏற்பாடு செய்ய வேண்டும். ஐரோப்பாவுக்கு வெளியேயுள்ள குடியேற்ற நாடுகளில் சில சலுகைகள் கொடுத்து அதன்மூலமாக ஜெர்மனி ஐரோப்பாவில் அடைந்த நஷ்டத்திற்கு, அதற்கு ஈடுபடுத்த வேண்டும்.

இந்தச் சமாதான நிபந்தனைகளை இரு கட்சியினரும் ஏற்றுக்கொண்டிருந்தால், 1916ம் வருஷம் ஆரம்பத்திலேயே யுத்தம் நின்றிருக்கும். ஆனால், நேசக் கட்சியினர், இந்தச் சமாதான நிபந்தனைகளுக்குச் சரியான பதில் சொல்லாமல் தள்ளிக் கொடுத்துக் கொண்டே வந்தனர். ஆனால், ஜெர்மானியர் இந்தச் சமாதானத்திற்குத் தயாராயிருப்பதாக அடிக்கடி அமெரிக்காவுக்குச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. ஜெர்மானியர்களுக்குள்ள இந்த ஆவலைப் பிரசிடெண்ட் வில்சனும் பாராட்டினார். ஆனால், ஜெர்மானியர்கள், கடற் போரை நிறுத்தாம

லிருப்பதும், பெல்ஜியத்திலிருந்து அநேகம் பேரை ஜெர்மானியர்கள் நாடு கடத்திக் கொண்டு வருவதும் அவருக்குச் சங்கடமாக இருந்தன. அவருடைய நிலைமை மிகவும் தர்ம சங்கடமாயிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் பிரசிடெண்ட் வில்சனுல், சமாதானத்தை உண்டு பண்ண முடியா விட்டால், தாங்கள் நீர் மூழ்கிக் கப்பல் யுத்தத்தை மீண்டும் தீவிரமாக நடத்துவதாக ஜெர்மானியர்கள் அவருக்குத் தெரிவித்தனர்.

இப்படியிருக்கிற போது 1916ம் வருஷம் நவம்பர் மாதம் அமெரிக்காவில் பிரசிடெண்ட் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தல் காரணத்தினுல், சமாதானப் பேச்சுகள் சிறிது காலம் தள்ளி வைக்கப் பட்டன. ஏனென்ருல், தேர்தலில் வில்சன் தேர்ந்தெடுக்கப் படாமல், வேறு யாரேனும் தேர்ந்தெடுக்கப் பட்டால் அவருடைய கொள்கை எப்படியிருக்குமோ என்பது அமெரிக்கர்களுக்குத் தெரியாமலிருந்தது. கடைசியில் தேர்தலில், வில்சன் வெற்றி பெற்ருர். வெற்றி பெற்றதும், அவர் செய்த ஒரு பிரசங்கத்தில், ஐரோப்பாவில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்று தாம் இரு கட்சியினருக்கும் எழுதப் போவதாகத் தெரிவித்தார். தம்முடைய வேண்டுகோளுக்கிணங்கி யுத்தத்தை இருதரப்பினரும் நிறுத்தா விட்டால் ஜெர்மானிய நீர் மூழ்கிக் கப்பல்களினுல் உண்டாகிற சேதத்தை வியாஜமாக வைத்துக் கொண்டு, அமெரிக்காவானது ஜெர்மனியின் மீது போர் தொடுக்க வேண்டி வரும் என்று குறிப்பிட்டார்.

பிரசிடெண்ட் வில்சனுடைய சமாதான முறைகள் வெற்றி பெறுமா என்பதற்காகக் காத்துக் காத்து ஜெர்மானியர்கள் சலித்துப் போய் விட்டனர். தவிர, இவர்களுடைய ராணுவபலமும் அப்பொழுது சிறுது மேலோங்கியிருந்தது. ருமேனியப் படையை ஜெர்மானியர்கள் தோல்வியுறச் செய்தார்கள். இன்னும் சில போர் முகங்களிலும் இவர்களுக்கு வெற்றி கிடைத்துக் கொண்டு வந்தது. நீர் மூழ்கிக் கப்பல் யுத்தத்தைத் தீவிரமாக நடத்த வேண்டுமென்ற பொதுஜனக் கூக்குரலும் அதிகமாயிற்று. ஆயினும் ஜெர்மானிய அரசாங்கத்தார் 1916ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தாங்கள் சமாதான மகாநாடு கூட்டுவதில் மிகுந்த ஆவலுடையவர்களாயிருப்பதைத் தெரிவித்தனர். இந்த அறிக்கையின் வாசகம் பொதுப்படையானதாக இருந்த போதிலும், ஜெர்மனியானது வெற்றியோடு கூடிய ஒரு சமாதானத்தைத்தான் விரும்புவதாக அர்த்தப்படும்படியிருந்தது. நேசக் கட்சியினர் சமாதான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்களென்றும், அதனுல் ஜெர்மானியர்கள் நீர் மூழ்கிக் கப்பல் யுத்தத்தைத் தீவிரமாக ஆரம்பிக்கக் கூடுமென்றும் பெர்லின் நகரத்திலிருந்த ஸ்பெயின் தேசத்துத் தூதர் அபிப்பிராயப் பட்டார். இப்படிப்பட்ட நிலைமையில் 18-12-1916 யன்று ஐரோப்பா யுத்தத்தில் சம்பந்தப் பட்டிருக்கிற இரு கட்சியினரும் என்னென்ன நிபந்தனைகளின் மீது சமாதானத்திற்கு வரத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தமக்குத் தெரிவிக்க வேண்டுமென்று பிரசிடெண்ட் வில்சன் எல்லா வல்லரசுகளுக்

கும் ஓர் அறிக்கை அனுப்பினர். ஆனால் இவருடைய முயற்சிகள் பலிக்கவில்லை. ஜெர்மானியர்களுக்கு தற்காலிகமாக ஏற்பட்டிருக்கிற ராணுவ மேம்பாட்டை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் அவர்கள் சமாதான நிபந்தனைகளை விதிப்பார்களென்றும், அப்படிப்பட்ட சமாதானத்திற்குத் தாங்கள் தயாராக இல்லையென்றும் நேசக் கட்சியினர் தெரிவித்தனர். ஜெர்மானியர்களும் பொதுவாக சமாதான மகா நாட்டைக் கூட்ட வேண்டுமென்று தான் சொன்னார்களே யொழிய என்னென்ன நிபந்தனைகளுக்குத் தாங்கள் உட்படுவார்களென்பதை நிர்ணயமாகத் தெரிவிக்கவில்லை 9-1-1917ல் பெர்லின் நகரத்திலிருந்த அமெரிக்கத் தூதராகிய கெரார்ட், தமது அரசாங்கத்திற்கு அனுப்பிய ஓர் அறிக்கையில் பின் வருமாறு குறிப்பிட்டிருந்தார். "தங்களுக்குச் சாதகமான சில நிபந்தனைகளை விதித்து பிரான்சுடனும் ருஷ்யாவுடனும் தாங்கள் தனியாகச் சமாதானம் செய்து கொண்டு, பின்னர் நீர் மூழ்கிக் கப்பல் யுத்தத்தைத் தீவிரமாக ஆரம்பித்து அதன் மூலமாக இங்கிலாந்தை ஒழித்து விட வேண்டுமென்பதற்காகவே ஜெர்மானியர்கள் சமாதான மகா நாட்டைக் கூட்டுவிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இங்கிலாந்தை ஒழித்து விட்டால் ஜப்பான், ருஷ்யா, பிரான்ஸ், முதலிய நாடுகளைத் தனித் தனியாகப் பிரித்துத் தங்கள் சுவாதீனத்துக் குட்படுத்திக் கொள்ளலாமென்பது அவர்கள் எண்ணம்."

கடைசியில் சமாதான முயற்சிகளுடனேயே 1916ம் வருஷம் கழிந்தது. சமாதானத்திற்கான அறிகுறிகள் ஒன்றுமே தென்படவில்லை. யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருந்த யாரும் அந்த முயற்சியில் மனப்பூர்வமாக ஈடுபடவில்லையென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. வில்சன்மட்டும் சமாதான நம்பிக்கையை யிழக்கவே யில்லை. 9-1-917ல் கெய்சரும், ஜெர்மானியச் சான்சலரும் நீர்மூழ்கிக் கப்பல் யுத்தத்தைத் தீவிரமாகத் தொடுப்பதாகத் தீர்மானித்து அப்படியே உத்தரவும் போட்டார்கள். அமெரிக்கா யுத்தத்தில் இறங்க வேண்டும் என்பதற்கு பிள்ளையார் சுழி போட்டாய் விட்டது. வேறு வழியின்றி அமெரிக்காவும் 1917ம் வருஷ ஆரம்பத்தில் ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஜெர்மனிக்கு விரோதமாகவும், நேசக் கட்சியினருக்குச் சாதகமாகவும் ஈடுபட்டுவிட்டது.

கிரீஸின் மன்னரான, இரண்டாவது ஜார்ஜ் மன்னர், 22-9-1922ல் பட்டத்துக்கு வந்தார். இவருடைய தகப்பனாரான கான்ஸ்டண்டைன் மன்னர், முடி துறந்து விட்டதன் காரணமாக இவர் இப்பதவி யேற்றார். ஆனால், இவர் சிங்காதனம் ஏறிய ஒரு வருஷ காலத்திற்குள் கிரீஸில் பெரிய புரட்சி ஏற்பட்டு, குடியரசு ஸ்தாபிக்கப் பட்டது. இதனால் இவர் 18-12-1923ல் நாட்டை விட்டு வெளியேறினார். பின்னர், குடியரசு முறை மாறி, முடியரசு ஏற்பட்டு, ஜனங்களுடைய அழைப்பிற்கிணங்க 25-11-1935ல் மீண்டும் பட்டத்தை ஏற்றுக் கொண்டார்.

—ஸ்ரீமதி நித்யா வேங்கடராமன், B. A. L. T.

சிறு கதை

காதலர்களின் சந்நியாசம்

லலிதா வருவதாகக் காணவில்லை. இத்துடன் மூன்றுதரம் டாக்டர் ரமணன் தனது மோட்டார் ஹார்னை அடித்தாய்விட்டது. 'ஏன் இப்படி வீணாக ஹார்னை அடித்துக்கொண்டிருக்கிறீர்? அவள் வருவதற்கு இன்னும் அரை மணி நேரத்திற்குக் குறையாது' என்றாள் அவர் மனைவி சீதாலக்ஷ்மி. 'ஆமாம்; நீ சொல்வதும் சரிதான்—கான்வொகேஷன் (Convocation) என்றால் என்றைக்கும் கிடைக்கக்கூடியதா? மாணவர்களின் வாழ்க்கையில் அது ஒரு முக்கிய தினமல்லவா? அதிலும் நமது குழந்தை லலிதா முதல் வகுப்பில் எம். ஏ. தேறி இன்று தங்கப் பதக்கமல்லவா பெற்றிருக்கிறாள். மற்ற மாணவர்களின் உபசார வார்த்தைகளையெல்லாம் கேட்டு தக்க பதில் அளித்துவிட்டுத் தானே வரவேண்டும்' என்று மிகவும் பெருமையுடன் பேசினார் லலிதாவின் தந்தை. இதற்குள் லலிதாவும் அவளுடைய சினேகிதிகள் சூழ, இடது கையில் கான்வொகேஷன் உடுப்பை லாவகத்துடன் ஏந்தியபடி கலாசாலை மாணவிகளுக்கு இயற்கையாய் உள்ள ஒரு ஒய்யார நடையுடன் அவ்விடம் வந்து சேர்ந்தாள். அவள் வண்டியில் ஏறினவுடன் அருகில் நின்றுகொண்டிருந்த கலாசாலைத் தலைவரான 'தாம்ஸன்' - துரை,' டாக்டர் ரமணனிடம் சென்று உபசார வார்த்தைகள் கூறினார். லலிதா மிகவும் சாமர்த்தியசாலியென்றும் சீமைக்கு அனுப்பிப் படிக்கவைக்கும்படியும் சொன்னார்.

மோட்டார் சென்னையின் அழகிய கடற்கரை யோரமாக வேகமாய்ச் சென்று, மைலாப்பூரில் டாக்டர் ரமணன் பங்களாவில் வந்து நின்றது. மறுபடியும் அன்றிரவு இந்தச் சந்தோஷ தினத்தைக் கொண்டாடும்பொருட்டு, லலிதா தன் சினேகிதிகளுடன் ஒரு சினிமாவுக்குப் போய் வந்தாள். அன்று பாதி இரவுக்கு மேல்தான் படுக்கைக்குச் சென்றாள். மணி இரண்டு அடித்தது—மூன்றும் அடித்தது. லலிதா படுக்கையில் புரண்டு புரண்டு பார்த்தாள். ஆனால் நித்ரா தேவி அவளை மறந்துவிட்டாள்போலிருந்தது. லலிதாவின் மனதில் ஆயிரக் கணக்கான எண்ணங்கள் புகுந்து சஞ்சரிக்கத் தொடங்கின. படிப்பெல்லாம் முடிந்தாகிவிட்டது. பட்டமும் பெற்றாகிவிட்டது. இனி என்ன செய்வது? ஒரு காரியத்தை எடுத்து முடிக்கும்வரைதான் அதில் ஆர்வமிருக்கும். முடித்துவிட்டால் பிறகு இனி என்ன செய்யலாமென்று யோசனை உண்டாவது அறிவாளிகளுக்கு சகஜந்தானே. இந்த முறையில் லலிதாவின் எண்ணங்களும் இனி என்ன செய்யலாமென்று யோசித்தவாறு இருந்தன.

லலிதா, அவள் தாய் தந்தையருக்கு ஒரே பெண். ஆதலால் மிகவும்

அருமையாக வளர்க்கப்பட்டவள் ஆனால் கர்நாடக வழக்கத்தின்படி லலிதாவிற்கு அவள் ஒன்பதாவது வயதிலேயே கல்யாணமாகிவிட்டது. அந்த நாட்களில் டாக்டர் ரமணன் தனது தாய்தந்தையரின் ஆதரவிலும் அதிகாரத்திலும் இருந்தபடியால் அவர்களின் ஏற்பாட்டின்படி லலிதாவுக்கும், அவள் கூடவே சலுகையாக விளையாடிக்கொண்டும் அவளுக்கு கதைகள் சொல்லிக்கொண்டும் அவளுக்கு ஒரு அருமைத் தமயனைப் போல் இருந்த அவளது அத்தான் வாசுதேவனுக்கும் விவாகம் செய்து வைக்கப்பட்டது.

கல்யாணமானபிறகு வாசு தனது குழந்தை மனைவியுடன் பேசுவதற்குச் சங்கோஜப்பட்டான். லலிதா மிகவும் குழந்தையாக இருந்தபடியால் சங்கோஜமென்பது இன்னதென்று இவளுக்கு விளங்கவில்லை. ஆகையால் அத்தானிடம் சகஜமாகப் பேசுவதற்குப் போவாள். வாசு இதற்குச் சரியாகப் பதில் சொல்லாமலிருந்ததால், லலிதா, அத்தான் தன்மேல் கோபித்துக் கொண்டிருந்ததாக எண்ணி தானும் அவன்மேல் இன்னமும் பிரமாதமாகக் கோபித்துக் கொண்டுவிட்டாள். இருவருக்கும் இரண்டு வருஷ காலம பேச்சு வார்த்தை இல்லாமலே யிருந்து வந்தது. இதற்குள் வாசுதேவனும் இன்டர்மீடியட் பரீக்ஷை தேறி, கிண்டி எஞ்சினியரிங் கலாசாலையில் சேர்ந்தான். இச்சமயம் இவன் கலாசாலை ஹாஸ்டலிலேயே இருந்தபடியால் இவனும் லலிதாவும் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்திக்க முடியாமல் போய்விட்டது.

இப்படியாக இன்னமும் இரண்டு வருஷம் சென்றன. இப்பொழுது லலிதா ஒன்பதாவது வகுப்பில் வாசித்து வந்தாள். வாசு இஞ்சினியர் இரண்டாவது வருஷம் படித்துக் கொண்டிருந்தான் வாசுவுக்கு அதிக பால்யத்தில் இருந்த ஸங்கோஜம் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டும் யௌவன பருவத்தில் ஏற்படக் கூடிய உணர்ச்சிகள் வளர்ந்துகொண்டும் வந்தன. இந்த நிலைமையில் வாசுவும் தன் மனைவிக்கு இரண்டு காதல் கடிதங்கள் எழுதினான். ஆனால் லலிதா இப்பொழுது காதல் கடிதங்களைப் படித்து ரஸிக்கக்கூடிய பருவத்தை அடையவில்லையாதலாலும், மேலும் அவள் வகுப்பிலுள்ள மற்ற மாணவிகளைப்போல் அவளும் விவாகமே பெண்களுக்கு ஒரு பந்தமென்றும் ஆடவர்கள் இங்கிதமில்லாத முரடர்கள் என்றும் இக்கதைய கொள்கைகளுடன் கூடிய நிலைமையில் இருந்தாள். மேலும் வாசுதேவனை அவன் ஒரு பெரிய கர்வி என்று இந்த நான்கு ஆண்டுகளாகவே கருதி வந்தாள். ஆகையால், இந்தக் கடிதங்களுக்கு இவள் பதில் போடாமல் அலக்ஷியமாக இருந்து விட்டாள். பாவம், வாசுவும் அதிசயமாக மனம் வருந்தினான். இந்தச் சமயத்தில் வாசுவின் தாயும் திடீரென்று இறந்து போனாள். தகப்பனை, குழந்தைப்பருவத்திலேயே இழந்த வாசுவும் தன்னை இப்பொழுது ஒருவரும் விரும்பாத ஒரு அநாதையாகக் கருதினான். துர்திர்ஷ்டவசமாக அவ்வருஷம் வாசு பரீக்ஷையிலும் தவறி விட்டான். ஆகையால் அவனுக்கு வாழ்க்கையிலேயே ஒரு கசப்பு ஏற்பட்டு விட்டது.

இது நடந்து ஒரு வாரத்திற்கெல்லாம் டாக்டர் ரமணனுக்கு வாசுவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில், தான் ஒருவரும் விரும்பாத ஒரு அநாதை யென்றும்—ஒரு பெரிய துர்திர்ஷ்டசாலியென்றும், தன்னால்—தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் கஷ்டங்களே ஏற்படுமென்றும்—ஆகையால் தான் தன் உயிரை மாய்த்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் தன்னை இனி யாரும் மறந்துவிடலாமென்றும் எழுதியிருந்தான். டாக்டரும் அவர் மனைவியும் ஆராத்துயரத்திலாழ்ந்தார்கள். அத்தான் இறந்த விஷயம் கேட்டதும் லலிதாவும் சிறிது வருந்தினாள். சமீபத்தில் கர்வத்துடனிருந்த வாசுவை மறந்து—தன்னுடன் குழந்தையில் விளையாடின அருமை அத்தானை நினைத்துக் கொண்டாள். ஆயினும் அவளுக்குச் சாதாரண ஒரு அத்தானை யிழந்த வருத்தம் மாத்திரமிருந்ததேயன்றி மற்றப்படி இதனால் தன் வாழ்க்கையில் ஏற்படக் கூடிய ஒரு வித்யாசத்தை அவள் உணரவில்லை.

அன்று இரவு லலிதா தன் படுக்கையில் நித்திரையின்றி படுத்துக் கொண்டிருந்த பொழுது அவளது எண்ணங்களும் சிறிது சிறிதாக அவளது குழந்தைப் பருவத்தை ஞாபக மூட்டின. அருமை அத்தானைப் பற்றி நினைத்துக் கொண்டாள். மெதுவாக எழுந்து அத்தான் எட்டு வருஷங்களுக்கு முன் தனக்கு எழுதியிருந்த கடிதங்களைப் பெட்டியின் அடியிலிருந்து எடுத்து மறுபடியும் வாசித்தாள். வாசுவின் அன்பு ததும்பும் கடிதம் இவள் மனத்தை இப்பொழுது உருக்கியது. இவள் மனதில் பல உணர்ச்சிகள் ஏற்பட்டன. இந்நிலைமையில் இவள்—வாசுதேவன் உயிர் மாய்த்துக் கொண்டதற்குத் தானே காரணமென்று எண்ணி ஏங்கினாள்.

பத்து ஆண்டுகள் பறந்தோடிச் சென்றன. இப்பொழுது காசியில் சர்வ கலாசாலையில்—லலிதா பெண்கள் வகுப்புக்கு உபாத்தியாயினியாகவிருந்தாள். கலாசாலையில் ஆசிரியராக இருப்பதை ஒரு இன்பக் கூடிய பதவியாக எண்ணினாள். இந்தக் கொள்கையை அநேகர் ஒப்புக் கொள்வார்கள். ஏனென்றால், இதில் டாக்டர்களைப் போல் அகாலங்களில் வேலை செய்ய வேண்டியதில்லை. சில உத்தியோகஸ்தர்களைப் போல் மழையிலும் வெய்யிலிலும், காட்டிலும் மேட்டிலும் பிரயாணம் செய்து அலைந்து திரிந்து வேலை பார்க்க வேண்டியதில்லை. சுகமாக மின்சார விசிறியின் கீழ் இருந்தபடி, பால்ய உற்சாகமும், திடசரீரமும், மனோவேகமும், புத்தி ஆர்வமுமுடைய யௌவனர்களுக்கும் யுவதிகளுக்கும் சரித்திரக் கதைகளைப் பற்றியும், விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சிகளைப் பற்றியும், பாஷைகளில் உயர்தர வசன காவ்யங்களிலுள்ள இலக்கிய இலக்கண நுட்பங்களைப் பற்றியும், எடுத்துரைத்து மாணவர்களின் மனதில் புகுத்தவும், ஆவலுடன் கிரஹித்துக் கொண்ட மாணவர்களின் முகத் தோற்றத்தைக் கண்டு சந்தோஷமடைவதும் இவ்விதமாய் வாழ்க்கையை இன்பகரமாகக் கழிக்கலாம். லலிதாவும் இவ்விதமாகக் கலாசாலை வேலையை உற்சாகத்துடன் செய்து வந்தாள்.

ஆயினும் இப்பொழுது இரண்டு ஆண்டுகளாக லலிதாவுக்கு கலாசாலை

வேலையைக் காட்டிலும் வேறு சில இதர விஷயங்களில் மனம் செல்ல ஆரம்பித்தது. இவ்வமயம் கலாசாலை மாணவிகளுக்கு மதத்தைப் பற்றி போதிப்பதற்காக ஒரு கீதை வகுப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. வாரத்திற்கு ஒரு முறை அந்த வகுப்பை நடத்தி வைப்பதற்காக அவ்வூர் மடத் தலைவரான ஸ்வாமி கிருஷ்ணானந்தர் வருவது வழக்கம். அவரது உபன்யாசங்களைக் கேட்டு லலிதா ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தாள். நுட்பமான விஷயங்களை யாவரும் அறியும்படி இலகுவான முறையில் விளக்கினார். அவரது சொற்பொழிவுகளைக் கேட்கும் பொழுது லலிதாவுக்கு சொல்ல முடியாத ஒரு இன்பம் ஏற்பட்டது. யாவருமே ஸ்வாமிகளின் உபன்யாசங்களை வெகுவாகப் பாராட்டினார்கள். ஆயினும் லலிதா இந்த வகுப்பு நடக்கும்பொழுது ஏதோ ஒரு பெரிய பரவசத்தை அடைந்தாள். அவருடைய உபன்யாசங்கள் அவளது செவிக்கு ஸங்கீதக் கச்சேரிகள் போலிருந்தன.

லலிதாவும் அவளுடன் கூட உழைத்து வந்த மற்ற ஆசிரியர்களில் சிலரும், ஸ்வாமி கிருஷ்ணானந்தரின் தர்ம பால பாடசாலையில் முறைப் பிரகாரம் வாரத்தில் இரண்டு தரம் குழந்தைகளுக்குப் பாடம் கற்பித்து வந்தார்கள். சாதாரணமாக உயர்ந்த வகுப்புகளுக்குப் பாடம் கற்பிப்பவர்களுக்கு தாம பாடசாலைகளில் வரும் மந்த புத்தியுடைய பாமரக் குழந்தைகளுக்குக் கற்பிப்பது ரஸிக்காது. லலிதாவும் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவள்தான். ஆயினும் இப்பொழுது ஸ்வாமிகளின் பள்ளிக்கூடத்தில் வேலை பார்ப்பது அவளுக்கு ஒரு அலாதியான திருப்தியை அளித்தது.

நிற்க ஒருநாள் மாலை சுமார் ஆறு மணிக்கு லலிதா தர்ம பாடசாலையிலிருந்து கலாசாலையை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். அன்று தினம் ஸ்வாமிகள் பாடசாலைக்கு மேற்பார்வையிட ஏன் வரவில்லையென்று யோசித்தவண்ணம் அவரை ஆச்ரமத்தில் பார்த்துவிட்டுப் போகலாமாவென்று தயங்கினபடி மெள்ள நடந்தாள். ஸ்வாமிகளைப்பற்றி அடிக்கடி எண்ணுவது இப்பொழுது அவளுக்குச் சாதாரணமாகிவிட்டது. ஏன் இவரிடத்தில் தனக்கு இம்மாதிரியான உணர்ச்சிகள் ஏற்பட வேண்டுமென்று தன்னைத்தானே கேட்டுக்கொள்வாள். மேலும் இவரைப் பார்க்கும்பொழுதெல்லாம் ஏதோ எப்பவோ பார்த்து பழகினவர் போல தோன்றியது. லலிதா யோசித்தவண்ணம் நடந்துகொண்டிருக்கையில் திடீரென்று வானம் கருத்து மேகங்கள் சூழ்ந்துகொண்டன. காற்றும் வேகமாக அடித்தது. பயங்கரமான இடிகளின் சப்தமும் மின்னல்கள் வெட்டும் காட்சியும் இவளுக்கு அச்சத்தை யுண்டுபண்ணின; தன்னை அறியாமலே அருகேயிருந்த ஸ்வாமிகளின் ஆச்ரமத்தை நோக்கி நடந்தாள். ஆச்ரமத்தின் அருகே வந்தவுடன் சட சடவென்று மழையும் ஆரம்பித்தது. அச்சமயம் வெளியே வந்த ஸ்வாமிகளும் லலிதாவைக் கண்டு பரபரப்புடன் எதிர்கொண்டு வந்து ஆச்ரமத்திற்குள் அழைத்துச் சென்றார். உள்ளே சென்றதும் தான் எப்பொழுதும் அணிந்துகொண்டிருந்த கருமை

யான வெய்யில் கண்ணாடியை கழற்றி மழைத் துளிகளைத் துடைத்துக் கொண்டே லலிதாவை நோக்கித் திரும்பினார். புடவை ஓரங்களைப் பிழிந்துகொண்டிருந்த லலிதாவும் அதே சமயத்தில் நிமிர்ந்தாள். இருவர் கண்களும் ஒருகணம் சந்தித்தன. அவர்கள் பார்வையும் கலந்தன. பளிச்சென்று ஸ்வாமிகளின் அழகிய பாந்த கண்களைப் பார்த்தவுடன் லலிதா உண்மையை உணர்ந்தாள். ஸ்வாமிகளும் பரபரப்புடன் கண்ணாடியை அணிந்துகொண்டார். ஆனால் லலிதாவின் தலை சுழன்றது. அவளை அறியாமல் ஒரு மயக்கம் ஏற்பட்டது. மறுகணமே மூர்ச்சையடைந்தாள்.

மூர்ச்சை தெளிந்து எழுந்தவள் மெள்ள கண்களை விழித்து எதிரில் தன்னைக் கவலையுடன் நோக்கியவண்ணமிருந்த ஸ்வாமிகளை—அல்ல அருமை அத்தானைப் பார்த்தாள். "அத்தான் என்னை மன்னிக்க வேண்டும். என்னால் அல்லவா நீ உன் படிப்பையும் உற்றார் உறவினர்களையும் விட்டு உலகத்தை வெறுத்து இவ்விதம் சன்யாசகோலம் பூண்டாய்" என்று கூறி அழுதாள். வாசுதேவனும் தான் இதுவரையிலும் சிரமத்துடன் அடக்கி வைத்திருந்த அன்பையும் துயரத்தையும் இன்னும் பல உணர்ச்சிகளையும் அடக்கமுடியாத நிலைமையை அடைந்தான். தான் தான் லலிதாவின் வாழ்க்கையைக் கெடுத்த பாபியென்றும், தான் அல்லவா அவளை மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும், தான் லலிதாவை கலாசாலையில் முதல் நாளே கண்டு கொண்ட விஷயத்தையும், இந்த மூன்று வருஷமும் கலாசாலைக்கு வருவதே தனக்குப் பெரும் இன்பமளித்ததென்றும் சொன்னான். பிறகு காதலர்கள் இருவரும் ஒரு மணி நேரம் வரை எவ்வளவோ விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள். நேரம் போனதும் தெரியவில்லை. மனோ சாந்தியும் ஏற்படவில்லை. சன்யாசாச்ரமம் பெற்ற வாசுதேவனுக்கு திரும்பவும் பூர்வாச்ரமம் செல்லுவதென்பது முடியாத விஷயமென்பதையும் இதற்கு சமூகமும் அனுமதி அளிக்காதென்பதையும், வெகு காலமாக யோக முறையில் ஈடுபட்டிருந்த வாசுதேவன் மனோ நிலைமையானது இல்லற இன்பத்தை விரும்பாதென்பதையும் லலிதா நன்குணர்ந்தாள். வெகு நேரம்வரை பேசி கடைசியாக ஒரு முடிவிற்கு வந்தார்கள். அதாவது இனி ஒருவரை யொருவர் பார்க்கக் கூடாதென்றும், லலிதா, தான் காசி வேலையை விட்டு சென்னைக்குத் திரும்பி விடுவதாகவும், வாசுதேவனும் வடக்கே வெகு தூரத்திலிருக்கு மற்றொரு மடத்திற்கு மாற்றிக் கொண்டு போவதாகவும் தீர்மானம் செய்துகொண்டார்கள்.

அதிக நேரமாகி விட்டபடியால் வாசுதேவன் லலிதாவை கலாசாலை வரைக்கும் கொண்டு போய் விட்டு வருவதாகச் சொல்லி, இருவரும் மெதுவாகக் கலாசாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது மழை நின்று தென்றல் மிருதுவாக வீசிக் கொண்டிருந்தது. இந்தக் குளிர்ந்த காற்றினால் இவர்கள் மனமும் சிறிது சிறிதாகக் குளிர்ந்த தன்மையை அடைந்தன. கொஞ்ச தூரத்திற்கப்பால் இருந்த ஒரு மேடையில் சில கலாசாலை மாணவர்கள் உட்கார்ந்துகொண்டு உல்லாஸமாகப் பாடிக் கொண்டிருக்

தார்கள். அதில் ஒருவன் சுக சாரீரத்துடன் பாடின பைரவி ராகமானது மெல்லிய காற்றின்மேல் மிதந்து வந்து இவர்கள் மனத்தினுள் புகுந்தது. கிழக்கே, அச்சமயம் சந்திரனும் மேகங்களைத் தள்ளிக் கொண்டு கிளம்பினான். சுற்றிலும் இருந்த இருளும் அகன்று பிரகாசமேற்பட்டது. அதே சமயத்தில் இவர்கள் மனதிலும் ஏதோ ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. இருவர்களின் மனதையும் மூடிக் கொண்டிருந்த மாயமாகிய இருளும் அகன்று அறிவு வெளிச்சம் ஏற்பட்டது. ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். இளநகை தவழும் முகத் தோற்றத்துடன் கூடிய லலிதாவைப் பார்த்து வாசுதேவனும் சிரித்துக் கொண்டே "லலிதா எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நாம் இருவரும் ஏன் பிரிய வேண்டும்? நீ எனக்கு இல்லறத் துணைவியாக இல்லா விட்டால் என்ன? நீ ஏன் எனக்கு துறவறத்திலும் துணைவியாக இருக்கக் கூடாது? சாஸ்திரப்படி நாம் இருவரும் வாழ்க்கைத் துணைவர்கள் தானே. நான் இல்லற வாழ்க்கையைத் துறந்தேனே யொழிய, மனித வாழ்க்கையைத் துறக்கவில்லையே. அப்படி உயிர்மாய்த்துக்கொள்வதற்கு எனக்கு தைரியமில்லாமல் போய்விட்டது" என்றான். அதற்கு லலிதா "ஆமாம், நல்ல வேளையாக அப்படி உயிர் துறக்காமலிருந்தீர்களே; அதையே நான் என் பாக்கியமாகக் கருதுகிறேன். இப்பொழுது துறவறத்திலும் உங்களுக்கு எவ்வளவோ வேலைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். சாதாரண இல்லறத்தினைக் காட்டிலும் உமது சம்ஸாரம் மிகவும் பெரிதாக வல்லவா இருக்கிறது? உங்களது தர்ம பாடசாலைக் குழந்தைகளுக்கு நீங்கள் ஒரு தந்தையைப்போல் இருக்கும் பொழுது நானும் அவர்களுக்கு ஒரு தாயைப்போல் இருக்க வேண்டாமா? இதுதான் நியாயம். நான் இனி கலாசாலை வேலையை விட்டு விட்டு உமது பள்ளிக்கூடத்திற்கே என்னுடைய படிப்பையும் பட்டங்களையும் அர்ப்பணம் செய்கிறேன்" என்றாள்.

விசால இருதயமுடையவர்களுக்கு வறுமை ஏற்படுகிற போது, அதை விட அவர்களுக்கு வேறு துயரம் வேண்டுவதில்லை. வறுமையானது, முதுமையை விட, நோயை விடக் கடுமையானது. வறுமையினால் வாடுகின்ற ஒருவன், தன் மனதில் தோன்றியதை எழுதவோ, செய்யவோ முடியாதவனாயிருக்கிறான். அவனுடைய தேகமும் மனமும் கட்டுப் பட்டுப் போகின்றன. இதனால் அவன், வறுமையை விட மாணமே மேலானதென்று கருதி, அதில் போய்ச் சரணடைந்து விடுகிறான்.

—ஜான்ப்ரேரே.

அன்றாட உலகம்



1941

மே

1 இங்கிலாந்தில் ஜெர்மன் ஆகாய விமானத் தாக்குதல்களின் மூலம் ஏப்ரல் மாதத்தோடு முடிவடைகிற ஒரு மாதத்தில் 29000பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; 40000 பேர் காயமடைந்திருக்கின்றனர்.

மே மாதம் முதல் தேதி அகில உலகத் தொழிலாளர் தினம். இந்தத் தினம், ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் கொண்டாடப்பட்டது.

வட ஆப்ரிக்காவிலுள்ள டோப்ருக் பிரதேசத்தில் ஜெர்மானியர்கள் நுழைந்து விட்டார்கள்.

அமெரிக்காவோ, பிரிட்டனோ வேறு வல்லரசோ சீனாவுக்கு உதவிசெய்துகொண்டு போகுமானால், அப்பொழுது ஜப்பான் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமென்று ஜப்பானியப் பத்திரிகையொன்று கூறுகிறது.

2 ஈராக்கில், பிரிட்டிஷ் துருப்புகளுக்கும் ஈராக்கியப் படைகளுக்கும் சண்டை மூண்டு விட்டது. பாக்தாதுக்கு 60 மைல் மேற்கேயுள்ள ஹப்பனியா வென்ற இடத்திலுள்ள பிரிட்டிஷ் ஆகாய விமான நிலையத்தை, ஈராக்கிய பீரங்கிப் படைகள் பலமாகத் தாக்கின.

3 யூகோஸ்லேவியாவின் வடமேற்குப் பிரதேசத்தை இத்தலி, தன்னோடு சேர்த்துக் கொண்டுவிட்டது.

கிரீஸிலிருந்து 45000 பிரிட்டிஷ் போர் வீரர்கள் காலி செய்யப்பட்டுவிட்டார்களென்று தெரிகிறது

ஹைதராபாத் அரசாங்கத்தார், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் எவ்விதமான அரசியல் நடவடிக்கைகளிலும் கலந்துகொள்ளக் கூடாதென்று உத்தரவிட்டிருக்கின்றனர்.

4 இன்று, ரீச்ஸ்டாக் சபையில் ஹிட்லர் பேசினார். அப்பொழுது, இத்தலி தோல்வியடைந்ததற்குக் காரணம், அதற்குப் போதுமான டாங்குகள் இல்லாமையேயென்றும், இந்த யுத்தத்தில் ஜெர்மனியின் வெற்றி நிச்சயமென்றும் கூறினார்.

மத்தியதரைக் கடலில் தக்க பாதுகாப்புடன் வந்துகொண்டிருந்த ஒரு ஜெர்மன் சாமான் கப்பலை, பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கிச் சேதம் விளைவித்தன.

வட ஆப்ரிக்காவிலுள்ள ஸொல்லம் என்ற பிரதேசத்தில் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாக ஆகாயவிமானக் குண்டுகளைப் பொழிந்தன.

இங்கிலாந்திலுள்ள லிவர்ப்பூல், மெர்ஸிஸைட் முதலிய முக்கியமான நகரங்களில் ஜெர்மன் விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

5 ஜப்பானின் முக்கிய நகரங்களாகிய டோக்கியோ, யோகஹாமா முதலிய நகரங்களில் பூமிஅதிர்ச்சி ஏற்பட்டது.

அபிசீனியாவின் சக்ரவர்த்தியாகிய ஹெயிலி செலாஸி இன்று அடிஸ் அபாபாவில் பட்டணப் பிரவேசஞ்செய்தார்.

ஜிப்ரால்டரில் வசிக்கும் ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் தவிர மற்றவர்கள் காலி செய்யப்பட்டுவிட்டார்கள்.

6 யுத்தம் ஏற்பட்டால் தற்காப்புக்கான ஏற்பாடுகள் யாவும் போர்த்துகலில் செய்யப்படுகின்றன.

கிரீஸுக்குப் பிரிட்டன் உதவி செய்த வரலாற்றை விவரித்து மிஸ்டர் ஈடன் இன்று காமன்ஸ் சபையில் கூறினார்.

ஜப்பானுக்கும் இந்தோ—சைனாவுக்கும் ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தம் இன்று இரு நாட்டுப் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப்பெற்றது.

ருஷ்ய அரசாங்கத்தின் நிருவாக சபைக்கு இதுகாறும் மிஸ்டர் மோலோடோவ் தலைவராயிருந்தார் இப்பொழுது மிஸ்டர் ஸ்டாலின் தலைவராயிருக்கிறார்.

7 இந்தியாவில் அடிக்கடி ஹிந்து—முஸ்லீம் கலவரங்கள் நிகழ்வதைக் குறித்துத் தாம் பெரிதும் வருந்துவதாகவும், இதற்கு அஹிம்சா முறையே தகுந்த பரிகாரமென்றும் காந்தியடிகள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

பர்மா அரசாங்கத்தின் பொக்கிஷ மந்திரியான உ-பா-தி என்பவர் இன்று உத்தியோகத்தினின்று விலக்கப் பட்டு விட்டார்.

மிஸ்டர் சர்ச்சிலின் மந்திரிச் சபையிடம் நம்பிக்கையிருப்பதாக பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் ஒருதீர்மானம் நிறைவேறியது.

8 பாக்தாத் ஆகாய விமான நிலையம், பிரிட்டிஷ் ஆகாய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டது.

இங்கிலாந்தின் பல பாகங்களையும் ஜெர்மன் ஆகாயவிமானங்கள் பலமாகத் தாக்கின. அதிகமான சேதத்தை உண்டு பண்ணின.

கிரீஸ் யுத்தத்தில் ஆஸ்திரேலியத் துருப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் பதினாறாயிரம் பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

தைலாந்துக்கும் இந்தோ—சைனாவுக்கும் சமரஸ உடன்படிக்கை இன்று கையெழுத்திடப்பெற்றது.

ஜெர்மன் ஆகாய விமானங்கள் சூயஸ் வாய்க்கால் பிரதேசத்தைப் பலமாகத் தாக்கின.

9 பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் புதியதொரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

மீண்டும் இன்று லண்டன் முதலிய நகரங்களில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன.

10 பர்மாவுக்கும் சீனாவுக்கும் இடையே போட்டிருக்கிற யுன்னான் பாதையை மூடிவிடப் போவதில்லையென்று சீனாவிலுள்ள பிரிட்டிஷ் தூதர் கூறினார்.

ஈராக்கிலுள்ள பல முக்கியமான இடங்களை பிரிட்டிஷ் படையினர் கைப்பற்றிக் கொண்டுவிட்டனர்.

ருஷ்ய அரசாங்கம் நார்வே, பெல்ஜியம், யூகோஸ்லேவியா முதலிய தேசங்களின் ஸ்தானீகர்களை, தான் அங்கீகரிக்க முடியாதென்று தெரிவிக்கிறது. இதற்குக் காரணம் 'மேற்படி நாடுகள் சுயேச்சையற்ற நாடுகளாகிவிட்டதாகும்

இந்திய மகா சமுத்திரத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு ஜெர்மானியக் கப்பலை பிரிட்

டிஷ் கப்பலொன்று கைப்பற்றிக்கொண்டு விட்டது.

11 பர்மா அரசாங்க மந்திரிச் சபையினரால் கொண்டு வரப்பட்ட நிலம் வாங்கும் மசோதா இன்று கவர்னரால் அங்கீகரிக்கப் பட்டது.

லண்டனில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் போட்ட குண்டுகளினால் வெஸ்ட் மினிஸ்டர் அப்பே, செயிண்ட் ஜேம்ஸ் அரண்மனை, காண்டர்பரி ஆர்ச் பிஷப் அரண்மனை, பிக்பென் என்ற பெரிய கடியாரம் முதலிய பிரபல கட்டிடங்கள் சேத மடைந்து போயின.

12 பிரிட்டிஷ் காமன்ஸ் சபைக் கட்டிடம், ஜெர்மன் ஆகாய விமானக் குண்டுகளுக்கு இரையாகி விட்டபடியால், புதிய கட்டிடத்தில் காமன்ஸ் சபைக் கூட்டம் இன்று கூடியது.

பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள், ஹாம்பர்க் முதலிய இடங்களில் குண்டுகளைப் பொழிந்து சேதத்தை உண்டாக்கின.

துருக்கியில் ஜெர்மன் தூதராயிருக்கும் வான் பாப்பன், ஜெர்மனி விஷயத்தில் துருக்கி எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றிக் கடைசி பட்சமாகத் தெரிவிக்கும் ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டு அங்காராவுக்குச் சென்றார்.

சூயஸ் கால்வாயப் பிரதேசம் மீண்டும் ஜெர்மன் ஆகாயவிமானங்களினால் தாக்கப் பட்டது.

13 டோப்ரூக் பிரதேசத்தில் பிரிட்டிஷ் துருப்புகள் ஜெர்மானியர்களைப் பின்னடையும்படிச் செய்து விட்டன.

பெங்காஸி என்ற இடத்தை பிரிட்டிஷ் கப்பற் படை பலமாகத் தாக்கியது.

ஹிட்லரின் உதவியாளராக இருந்த ருடால்ப் ஹெஸ் என்பவர், இன்று ஸ்காத்லாந்தின் ஒரு பாகத்தில் இறங்கியிருக்கிறார். இவரைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கைது செய்திருக்கிறார்கள்.

பிரெஞ்சு அரசாங்கத்தின் பிரதிநிதியான தளபதி டார்லன் என்பவரும் ஹிட்லரும் இன்று சந்தித்துப் பேசினார்கள்.

14 ருடால்ப் ஹெஸ், பைத்தியம் பிடித்தவரென்று சொல்லப்பட்ட வதந்தி இப்பொழுது மறுக்கப்பட்டிருக்கிறது. அவர், ஹாமில்ட்டன் பிரபுவைச் சந்திப்பதாகவே வந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது.

ஜெர்மனியானது, பிரான்சின் வழியாக, அநேக நாசகாரிக் கப்பல்களை மத்திய தரைக் கடலுக்குள் அனுப்பிக் கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் தெரிவிக்கப்பட்டது

ஜெர்மன்-இத்தாலியப் படைகள், எகிப்தைத் தாக்குமென்று சொல்லப்படுகிறது.

சீன-ஜப்பானிய யுத்தத்தில், சீனப் பெரும் படை யொன்றை, ஜப்பானியப் படை யொன்று சூழ்ந்து கொண்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது.

15 ஜெர்மனியிலிருந்து ருடால்ப் ஹெஸ் ஓடி வந்து விட்டதானது, நாஜி கட்சிக்குள் பெரிய பிளவை உண்டு பண்ணி விட்டிருக்கிறது.

சிரியாவில் நாஜி ஆகாய விமானங்கள் வந்து இறங்கியிருக்கின்றன. இதனால், சிரியா தேசத்து ஆகாய விமானங்களை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் தாக்கும்படியான நிர்ப்பந்தத்திற்குட்பட்டிருக்கின்றன.

எகிப்திய எல்லைப் புறத்தில் நடைபெறும் சண்டையில், ஜெர்மன் படையின் வாக்கியிருக்கின்றன.

16 சிரியாவில் மூன்று இடங்களில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் தங்கியிருந்தன. இவற்றை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

சிரியாவின் பல இடங்களிலும் ஜெர்மானியர்கள் டாங்கிகளை இறக்கி விட்டார்களென்று சொல்லப்படுகிறது.

இன்று ஹாமில்டன் பிரபுவும் ருடால்ப் ஹெஸ்ஸும் சந்தித்துப் பேசினார்கள்.

17 ஈராக்கிலுள்ள ஹப்பனியா என்ற பிரிட்டிஷ் ஆகாய விமான நிலையத்தை ஜெர்மன் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

ஜப்பானிய ஆக்ரமிப்புக்குட்பட்ட ஜப்பானிய அரசாங்கத்தார், பிரிட்டிஷ் சாமான்கள் வியாபாரமாவதைப்பற்றி பாரபட்சம் காட்டுவதனால், தாங்களும் அதே மாதிரி ஜப்பானியச்சரக்குகளுக்குப் பாரபட்சம் காட்டவேண்டியிருக்கிறதென்று மிஸ்டர் ஈடன் காமன்ஸ் சபையில் கூறியதானது சீனுவுக்கு அதிக திருப்தியை உண்டுபண்ணியிருக்கிறது.

18 சீன—ஜப்பானிய யுத்தத்தில் ஷான்ஸி—ஹோனுன் ஓரத்தில் நடைபெற்ற பெரிய போராட்டத்தில் ஜப்பானியர்களுக்குப் பெரிய வெற்றி ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

19 அபிசீனியாவில், இத்தாலியர்களின் வசமிருந்த அம்பா-அலாகி பிரிட்டிஷாரிடம் சரணடைந்து விட்டது.

20 கிரேட் தீவில் ஜெர்மானியப் படைகள், பாராசூட்டில் வந்திறங்குகின்றனவென்று லண்டனில் சொல்லப்படுகிறது. இதனால் மேற்படி தீவில், ஜெர்மானியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் பலத்த யுத்தம் தொடங்கிவிட்டது.

ஈராக்கில் பல்லூஜா என்ற ஊரை பிரிட்டிஷார் கைப்பற்றிக்கொண்டுவிட்டனர்.

அபிசீனியாவில் இத்தாலியப் படைகளின் சேனாபதியாயிருந்த அயோஸ்டா பிரபு, தமது பரிவாரங்களுடன் பிரிட்டிஷாரிடம் சரணடைந்தார்.

சிரியாவில் ஜெர்மானியப் படைகள் பிரவேசித்துவிட்டதாகத் தெரிகிறது.

21 சிரியாவில் ஜெர்மானியப் படைகளுக்கு இடங்கொடுத்திருப்பதைக் கண்டித்தும், இது விஷயத்தில் பிரெஞ்சு அரசாங்கத்தாருக்கு எச்சரிக்கை செய்வதாகவும், காமன்ஸ் சபையில் மிஸ்டர் அந்தோனி ஈடன் கூறினார்.

22 கிரீஸில் ஜெர்மானியர்களால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்டிருக்கிற ஆகாய விமான நிலையங்களை பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கின.

ஆஸ்டின் மோட்டார் தொழிற்சாலைச் சொந்தக்காரராகிய லார்ட் ஆஸ்டின் இறந்து விட்டார்.

ஜெர்மானியர்கள், சைப்ரஸ் தீவைத் தாக்க உத்தேசித்திருக்கிறார்களென்று ஒரு செய்தி கூறுகிறது.

23 ஈராக்கின் ரீஜெண்டான எமிர் அப்துல்லா ட்ரான்ஸ் ஜார்டோனியாவிலிருந்து ஈராக்குக்கு வந்து சேர்ந்தார்.

24 42.100 டன் நிறையுள்ள "ஹுட்" என்ற பிரிட்டிஷ் யுத்தக் கப்பலானது, ஜெர்மன் கடற்படையால் மூழ்கடிக்கப் பட்டது.

கிரேட்டேயில் தங்கியிருந்த கிரீக் மன்னரும் அவருடைய பரிவாரங்களும் எகிப்துக்கு சென்றுவிட்டனர்.

25 கிரேட்டேயில் இன்னும் அதிகமான ஜெர்மன் துருப்புகள் வந்து இறங்கிக்கொண்டிருக்கின்றன.

—லார்ட் பைரன்

கிரீஸுக்கு ஒரு கண்ணீர்!

கி. பி. பத்தோன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் கிரீஸ், துருக்கியின் ஆதிக்கத்திற்குட்பட்டு, சுதந்திரமிழந்து கிடந்தது. இதைக் குறித்து வருந்தி, இதன் சுதந்திர முயற்சியில் ஈடுபட்டவன் பைரன் என்ற ஆங்கில மகா கவி. இவன் இயற்றிய "டான் ஜுவான்" என்ற காவியத்தில், கிரீஸைப் பற்றிப் பாடியுள்ள ஒரு சில பாடல்களை, நமது அன்பர் ஒருவர் உரைநடையில் வார்த்தைக்கு வார்த்தையாக மொழி பெயர்த்து அனுப்பியிருக்கிறார். அதனை அப்படியே எவ்விதமாற்றமும் செய்யாமல் இங்கு வெளியிட்டிருக்கிறோம். தற்போது, சுதந்திர மிழந்து நிற்கிற கிரீஸுக்கு, சுமார் 125 வருஷங்களுக்கு முன் பாடிய பைரனுடைய வாசகம் எவ்வளவு பொருத்தமுடையதாகவும் தேவையாகவும் இருக்கிறது!

---

*கிரீஸே! கிரீஸே! ஸாப்போ*வின் அன்பும் இசையும் கொண்ட இடமே!*
போர்க்கலையும் சமாதானக் கலையும் தோன்றிய நிலமே!
டெலோஸும்† போபியஸும்‡ உதித்த பூமியே!
நித்தியமான கோடைகாலம் இதனைப்பிரகாசிக்கச் செய்துகொண்டிருக்கிறது!
ஆனால், இதன் சூரியன் தவிர எல்லாம் அஸ்தமித்து விட்டன!

ஃ ஃ ஃ ஃ ஃ

---

* ஒரு கிரேக்கப் பெண் கவி. கி. மு. 6வது நூற்றாண்டில் வாழ்ந்தவள்.

† கிரேக்க தீவுக் கூட்டங்களில் முக்கியமானதொரு தீவு. இங்குதான் அப்போலோ என்கிற சூரிய தேவதை உற்பத்தியானதாகச் சொல்லப்படுகிறது. கிரேக்கர்கள் அனைவரும் ஒரு சாம்ராஜ்யமாகச் சேர வேண்டுமென்று தீர்மானித்தது இந்த டெலோஸில்தான்.

‡ வெளிச்சத்தை அளிக்கக் கூடிய தெய்வம் என்று சொல்லலாம்.

நினது மலைகள் மாரத்தோனை * நோக்குகின்றன!
மாரத்தோன் மைதானமோ கடலைப் பார்க்கின்றது!
அங்கு ஒரு மணி நேரம் நான் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தேன்.
கிரீஸ் சுதந்திரமாயிருக்கக் கூடுமென்று கனவு கண்டேன்!
ஏனென்றால், பர்ஷியர்களின் சவக்குழிகளின்மீது நின்றுகொண்டிருக்கிற நான்
அடிமையென்று என்னைக் கருதிக் கொள்ள முடியவில்லை.

ஃ ஃ ஃ ஃ ஃ

ஸாலமிஸ் † தீவைப் பார்த்துக் கொண்டிருக்கும் மலைமீது
மன்னரசன் ஒருவன் அமர்ந்தான் காண்.
கீழே ஆயிரக் கணக்கான கப்பல்கள் வணங்கி நின்றன.
ஜாதி வாரியான ஜனங்கள் படிந்து நின்றனர்.
சூரியோதயத்தின் போது அவர்களை அவன் எண்ணினான்;
சூரியாஸ்தமனத்தின் போது அவர்களெல்லோரும் எங்கே?

ஃ ஃ ஃ ஃ ஃ

அவர்களெல்லோரும் எங்கே? எனது நாடே! நீ எங்கே?
குரலடைத்துப் போன நினது கடற் கரையில்
வீரர்களின இசை, தொனியற்றுக் கிடக்கிறது!
வீரர்களின் இருதயத் துடிப்பு நின்று விட்டது!
நினது தெய்விக வீணை என்போன்றவர்கள் கரத்தில்
வந்து சேரும் இழிவையா அடைய வேண்டும்?

ஃ ஃ ஃ ஃ ஃ

நாட்டின் புகழ் மங்கிப் போன காலத்தில்,
அடிமை ஜாதியாரில் ஒருவராகப் பிணைக்கப்பட்டிருந்தாலும்
ஒரு தேசபக்தன் என்று சொல்லிக் கொண்டு அவமானப்படுவது விசேஷம்.

---

* இந்த இடத்தில் கி. மு. 490ல் கிரேக்கர்கள், பர்ஷியர்களைத் தோற்கடித்துப் புகழ் பெற்றார்கள்.

† ஸாலமிஸ் தீவில்தான், ஜெர்க்ஸஸ் என்ற பர்ஷிய மன்னனின் கீழ் வந்த பர்ஷியக் கடற் படையை, கிரேக்கக் கடற்படையானது கி. மு. 480ல் முறியடித்து விட்டது.